தேவரீர், Your lordship, (*2d person plu. of a symbolic verb.*)

தேவருணவு—தேவருண்—தேவவுணவு, *s.* Nectar, ambrosia, amrita, அமுதம்.

தேவர்—தேவர்கள், *s.* [*pl. of* தேவன்.] Gods, celestials, deities, objects of worship, gods of Swerga or any other inferior class, *&c.* 2. Honorable persons, as a guru or priest, உயர்ந்தோர்.—*Note.* According to the Saiva sect the superior gods, or forms of the first order assumed by the Deity are five, viz.: 1. Brahma, பிரமன். 2. Vishnu, விட்ணு. 3. Rudra or Siva, உருத்திரன். 4. Mayeswara, மயேசுரன். 5. Sathasiva, சதாசிவன். These are called, பஞ்சமூர்த்திகள்; the five Murtis, or பஞ்சகர்த்தாக்கள், five lords.

தேவர்கோயில், *s.* A temple, தேவாலயம்.

தேவர்கோன்—தேவேந்திரன், *s.* Indra.

தேவர்க்காடல், *v. noun.* Demoniac possession, dancing after certain sacrifices to devils, as சன்னதம், which see.

தேவர்வகை, *s.* The gods of Swerga, 330,000,000, are divided into four classes, with a chief for each கோடி or 10,000,000, as follows. 1. தவாதசாதித்தர், the twelve *Adityas*, ஆதித்தர், (*lit.*) the twelve suns, chiefs of their class numbering with them, 120,000,000. 2. ஏகாதசருத்திரர், the eleven *Rudras*, உருத்திரர், lords of their companies, comprising in all, 110,000,000. 3. அஷ்டவசுக்கள், the eight *Vasus*, their classes, including themselves, containing 80,000,000. 4. மருத்துவர், the two *Asvinis*, அச்சுவினிகள், the two physicians, the whole class being 20,000,000.

தேவலகன், *s.* A brahman who attends on an idol, அர்ச்சகப்பிராமணன். W. p. 423. DEVALAKA.

தேவலோகம், *s.* World of the gods, Swerga, the third of the seven upper worlds, of which Indra is king, the lowest heaven of mortals, who assume the form of gods for a residence in it. The enjoyments are all sensual, and the period of their continuance depends on the merit of the persons while on earth. When this is exhausted, they return for another period of probation; or go to a place of suffering for the expiration of previous demerit. This is the only heaven presented to the hope of the multitude, and generally the highest bliss they anticipate, சுவர்க்கம்.

தேவவசனம்—தேவவாக்கு, *s.* The word of God, the divine word, கடவுள்வாக்கு.

தேவவசிகரம், *s.* [*R. Cathol. usage.*] Transubstantiation. See வசிகரணம்.

தேவவருஷம் — தேவவருடம், *s.* A year of the gods. See தேவண்டு.

தேவவிரதன், *s.* (*St.*) Bishma, வீடுமன். 2. A pious or religious person, கடவுள்வழி படுவோன். W. p. 434. DEVAVRUTA.

தேவவிருட்சம், *s.* Any of the five species of trees in Swerga, பஞ்சதரு. W. p. 424. DEVAVRUKSHA.

தேவவெளிப்படுத்தல், *s.* [*Chris. usage.*] Divine revelation.

தேவவைத்தியம், *s.* Superior medical preparations requiring a knowledge of chemistry, and regarded as of divine origin. See வைத்தியம்.

தேவன், *s.* A Deity, a god, a divine being, கடவுள். W. p. 421. DEVA. 2. A title given to அம்படியர் caste. 3. A title given to some among Maravars. 4. (*சது.*) The name of Argha, அருகன்.

தேவாங்கம், *s.* Silk cloth, பட்டுச்சீலை.

தேவாசனம், *s.* [*in Chris. usage.*] The throne of god, an altar, கடவுளிருக்கை.

தேவாசுவம்—தேவாஸ்வம், *s.* The horse of Indra, இந்திரன்பரி; [*ex* அசுவம்.]

தேவாண்டு—தேவஆண்டு, *s.* A year of the gods of Swerga, being three hundred and sixty-five years of mortals, தெய்வவருஷம்.

தேவாதாயம் — தேவதாயம், *s.* Allowance for the support of heathen temples.

தேவாதி, *s.* God, கடவுள். (*சது.*)

தேவாதிதேவன், *s.* The God of gods.

தேவாதியர், *s.* [*com.* தேவாதிகள்.] The gods of Swerga and other celestials.

தேவாதீனம், *s.* Properties, peculiar rights, prerogatives, &c., of a deity. 2. Divine providence. See தெய்வாதீனம்.

தேவாத்திரம்—தேவாஸ்திரம், *s.* A divine missile-weapon from the gods.

தேவாமிர்தம் — தேவாமுதம், *s.* The ambrosia of the gods, the food of immortality, தேவருணவு.

தேவாரம், *s.* Divine praises, songs, &c., chanted by an assistant of the priest or others, after the performance of the *puja* in the Saiva temples. They were made by the three celebrated servants of Siva, அப்பர், சம்பந்தர் and சுந்தரர், and are called the Tamil Veda, being considered divine.

தேவாலயம், *s.* A temple, a place of worship, any sacred shrine, கோயில். W. p. 424. DEVALAYA. 2. (*சது.*) The golden mountain Maha Meru, as the favorite resort of the gods, மேருகிரி. See ஆலயம்.

தேவாலயத்தினுடைமை, *s.* Temple property, கோயிற்சொத்து.

தேவாநுட்டிப்பு, *v. noun.* Religious practice, duties, exercises, worship, &c.; [*ex* அநுஷ்டிப்பு, observance.]

தேவி, *s.* A goddess. 2. Parvati, பார்வதி. 3. Durga, துர்க்கை. 4. Kali, காளி. 5. A queen, the wife of a prince, or nobleman, a term of respect to a married woman, சிமட்டி. 6. A wife, மனைவி—as அண்ணன்தேவி, elder brother's wife.

தேவிகோட்டம், *s.* Any temple of Kali, காளிகோயில்; [*ex* கோட்டம்.] 2. A town, ஓர். W. p. 424. DEVIKOD'D'A.

தேவிபட்டினம், *s.* The town of Devipatam, ஓர்.

தேவீகம்—தேவிகம், *s.* [*com.* தெய்வீகம்.] Divinity.

தேவேந்திரன், *s.* Indra, இந்திரன்.

தேவோக்கித்தம்—தேவோக்தம், *s.* Divine revelation, தேவவெளிப்படுத்தல்; [*ex Su. Ukta*, spoken.] (*Beschi.*)

தேவோத்தியானம், *s.* A flower-garden for the gods, also a garden to produce flowers for the idols; [*ex* உத்தியானம்.]

தேவளம், *s.* (*Tel.* దేవళము.) A temple, கோயில்.

*தேவன்—தேவி. See under தேவம்.

*தேவீராம், *s.* (*St.*) The 248 longitudinal arcs registered in the Table of பஞ்சாட்சரக்கிரமம்; [*ex* தேவீராம்=தேஜஸ்சான்=248.]

தேவை, *s.* Need, necessity, want, exigency, வேண்டியது. (*Colloq.*) 2. A name of a town, Ramnad, இராமநாதபுரம்.

தேவையில்லை. It is not needed, not necessary, it is of no consequence. 2. [*elliptical.*] There is nothing wanting or objectionable in it; it will do.

அவன்பயத்தினிமெனக்குத்தேவையில்லை.....His assistance is not necessary to me.

அதைக்கொண்டவனுக்குத்தேவையில்லை. That is no concern of his.

தேளி, *s.* A kind of fish, ஓர்மீன், Scorpœna, *L.* (*c.*) 2. A red kind of cocoa-nut, கெளித்தேங்காய்.

தேள், *s.* A scorpion, தேறுக்கால். *(c.)* 2. Scorpio of the Zodiac, விருச்சிகராசி. 3. The seventeenth lunar asterism, அனுசாரம்.

தேள்கொடுக்கு—தேட்கொடுக்கு, *s.* The sting of a scorpion.

தேள்கொட்ட, *inf.* To sting as a scorpion.

தேள்கொட்டபாம்புக்குமருந்திருக்கிறதா. Should one apply the antidote for a snake-bite to a scorpion's sting?

தேறகம்—தேறை, *s.* [*prov.*] A small kind of fish, தேறைமீன்.

தேறலர்—தேறலார், *s.* Enemies, &c. See தேறு, *v.*

தேறல், *s.* Toddy, vinous liquor, கள். (சது.) 2. Honey, தேன். 3. See தேறு, *v.*

தேறு, *s.* A piece, துண்டு, as of ginger, turmeric, calamus, &c., மஞ்சள்முதலியவற்றின்தேறு. 2. [*com.* தேற்று.] The clarifying nut-tree, Strychnos, *L.* 3. *(p.)* Clearness, தெளிவு. 4. Certainty, நிச்சயம்.

சுக்குத்தேறு, *s.* A piece of dry ginger.

மஞ்சள்தேறு, *s.* A root of saffron.

வசம்புத்தேறு, *s.* A piece of calamus.

தேறு, றேன், தேறினேன், வேன், தேற, *v. n.* To recover strength, vigor, &c.,—as persons, beasts, plants; to grow well—as vegetation; to thrive, improve, செழிக்க. 2. To recover from swooning, intoxication, drooping, தெளிய. 3. To be comforted, consoled, solaced, soothed; to recover from fear, to cheer up, take courage, தைரியங்கொள்ள. 4. To make proficiency, arrive at perfection in a lesson, or in an art, &c., அதிகரிக்க. 5. To be thorough, accomplished, celebrated, perfect, mature, clear as the mind, to come to perfection, maturity, முதிர. 6. To prove, to result, to amount to—as profit, to turn out clear, பயிக்க. *(c.)* 7. To become stiff, hard, &c., as boiled rice, fruits, &c., when cold, சோறு முதலியவிறைக்க. 8. To stay, abide, தங்க. (சது.) 9. *v. a.* To form an opinion, to ascertain, to arrive at certainty, நிச்சயிக்க. 10. To confide, trust in, நம்ப.

ஒருமுழந்தேறும். There will be one cubit clear.

தேறலர்—தேறலார், *s.* Foes, enemies, பகைவர். 2. Ignorant persons, அறிவிலார்.

தேறவிசாரிக்க, *inf.* [*also* தேரவிசாரிக்க.] To investigate thoroughly so as to be certain.

தேறுமை, *v. noun. (neg.)* Uncertainty, unfruitfulness, unsteadiness.

தேறுர், *appel. n.* As தேறலர்.

தேறின எழுத்து, *s.* A finished handwriting. See under எழுத்து.

தேறினகட்டை, *s. (fig. in cant.)* An experienced person.

தேறினகாய், *s.* A nearly ripe fruit.

தேறினபயிர், *s.* Thriving vegetation.

தேறினபுத்தி, *s.* Improved intellect. 2. Good parts.

தேறினவன், *appel. n.* A man well versed in an art, a man of experience.

தேறுகடை, *s.* Settlement, finishing, நிச்சயம்.

தேறுகடைபண்ண, *inf.* To make a settlement, come to a decision.

தேறுகூடி *s.* [*prov.*] Branding cattle to promote their fattening, தெளிவுகூடி. 2. Brand on cattle.

தேறுதலே, *s.* [*vul.*] Courage, தைரியம். 2. Comfort, ஆதரல்.

தேறுநர், *s.* The learned, கற்றோர். 2. Trust-worthy persons, நம்பத்தக்கவர். *(p.)*

படிப்பிலேதேற, *inf.* To make great proficiency in learning, to excel in study.

மனந்தேற, *inf.* To be comforted, consoled, &c. 2. To become sure, certain.

தேறல்—தேறுதல், *v. noun.* Certainty, நிச்சயம். 2. Determination, finishing of a business, முடிவு. 3. Staying, standing, தங்கல். (சது.) 4. Relief from sickness, குணமாதல். 5. Comfort, consolation, solace, ஆறுதல்.

தேறுதல்சொல்ல, *inf.* To comfort, console, cheer. *(c.)*

தேற்றம், *v. noun.* Certainty, assurance, &c., as தேறல், 1, 2. (சது.) 2. Clearness, தெளிவு. 3. [*in gram.*] An emphatic, ஏ, or மன்ற, as expressive of certainty, emphasis, &c., தேற்றகுறிப்பு. 4. Recovery from sorrow, &c., as தேற்றரவு. 5. Comfort, as தேறல். 6. Thriving, firmness, good growth, செழிப்பு.

ஆத்தேற்றமாயிருக்கிறான். The person has gained strength, flesh, &c.

தேற்றக்குறிப்பு — தேற்றப்பொருள், *s.* See தேற்றம்.

தேற்றங்கொடுக்க, *inf.* To comfort, console, encourage. 2. To gain or recover strength, grow stout and firm, to thrive as persons, beasts, plants, &c. 3. To recover from dejection, to be cheerful as தெளிவுகொடுக்க.

தேற்றஞ்செய்ய — தேற்றம்பண்ண, *inf.* To comfort, console, encourage.

தேற்றமாய்ப்பேச, *inf.* To speak comfortably.

தேற்றமானபயிர், *s.* A reviving and thriving crop. See தேறினபயிர்.

தேற்றமானவன், *appel. n.* A courageous person. 2. One gaining strength, after weakness.

தேற்றரவு, *v. noun.* Relief from sorrow or fear; consolation, comfort, solace, தெளிவு. *(c.)*

தேற்றரவாளன் — தேற்றரவாளி, *s.* A comforter, consoler, encourager, திடப்படுத்துவோன். 2. [*in Chris. usage.*] The Holy Spirit.

தேற்றரவுசொல்ல, *inf.* To comfort, to cheer.

தேற்ரு, *s.* The water-clearing-nut tree, நீர்மம், Strychnos potatorium, *L.*—*Note.* The grated nut thrown into a pot of turbid water clarifies it by precipitation.

தேற்ருங்கொட்டை, *s.* The தேற்ரு nut.

தேற்ருங்கொட்டைக்குளிகை, *s.* Medicinal pills made of the தேற்ரு nut.

தேற்ருங்கொட்டையிலேஇயம், *s.* An electuary made of the nut.

தேற்ருங்கொட்டையுரைக்க, *inf.* To grate the தேற்ரு nut.

தேற்ரும்பொடி, *s.* Medicinal powders of the nut.

தேற்ருர், *s. (plu.)* The ignorant, அறிவீனர். 2. Foes, enemies, பகைவர்; [*ex* தேற்ரு.]

தேற்று, றிறேன், தேற்றினேன், வேன், தேற்ற, *v. a.* To comfort, to console, ஆற்ற. 2. To recover one from fear, swooning, weakness or dejection, குணமாக்க. 3. To convince, assure, relieve from doubt, மெய்ப்பித்த. 4. To communicate strength, to nourish, cherish, invigorate, பலமுண்டாக்க. 5. To clear, clarify, refine, purge, சுத்திசெய்க. *(c.)* 6. To clear up, to decide, நீக்க. 7. *(for* தேற.*)* To know, to know certainly, அறிய. *(p.)*

தேனர், *s. (plu.)* Thieves, robbers, திருடர். [*ex* தேனு.] (சது.)

தேனு, *s.* Stealth, stealing, robbery, களவு. (சது.)

•தேனு—தேநு, *s.* A milch-cow, one that has lately calved, பாற்பசு. W. p. 447. DHENU. 2. A cow, பசு. 3. The cow of Swerga, தெய்வப்பசு. (See காமதேனு.) 4. A buffalo, எருமை. 5. A horse, குதிரை. (சது.)

•தேனுகன், *s.* A Rakshasa, ஓரசுரன்.

தேனுகாரி, *s.* Krishna, as an enemy of தேனுகாசுரன், whom he destroyed in battle, கொன்றவர்; [*ex* அரி.]

தேன், *s.* Honey, மது. *(c.)* 2. Toddy, கள். 3. Fragrance, odor, வாசனை. 4. A beetle, வண்டு. 5. Female bee, பெண்வண்டு. —*Note.* There are some varieties of honey; குறிஞ்சித்தேன், wild honey from the hills; கொசுத்தேன், பொந்துதேன், றெதேன், honey of a very small bee; பெருந்தேன், good honey from the hills produced by large bees; கொம்புதேன், honey from a bunch of a tree in a comb; செந்தேன், red honey of high flavor.

தேன்கூட்டிலேகல்லெறிவிட்டேறியலாமா. Would one stone a bee's nest?

தேனிற்நோய்கையைக்காரோ. Will not those who handle honey lick their fingers?

தேனும்பாலும்போலே. United as closely and sweetly as honey and milk.

தேனிருல், *s.* [*vul.* தேனிருட்டு.] Honeycomb, தேன்கூடு.

தேனீ, *s.* A bee, தேன்கூட்டுமீ. *(c.)*

தேனூற, *inf.* To flow with honey, to be melifluous. 2. To be pleasant, gratifying.

தேனூறுமலர். The honey-forming flower.

தேனெறும்பு, *s.* The largest kind of emmet, fond of sweets, பெரியஎறும்பு.

தேனெழுகல், *v. noun.* Drops of honey.

தேன்கடல், *s.* One of the seven seas, the sea of honey, நீர்கடல்.

தேன்கதலி, *s.* A sweet kind of plantain, நீர்வாழை.

தேன்குழல்—தேன்குழாய்—தேங்குழல், *s.* A kind of pastry fried in ghee, fritters, நீர்பண்ணியாரம்.

தேன்குழலுரல், *s.* A mould for making this pastry.

தேன்குழற்கம்பி, *s.* A piece of pastry.

தேன்கூடு, *s.* A bee's nest or hive, தேனீக்கூட்டம். 2. Cells in a bee's nest, தேன்கூட்டினுட்குழி. 3. Honey-comb, தேனிருல்.

தேன்தோடை—தேன்றோடை, *s.* [*prov.*] The orange tree or fruit. See தோடை.

தேன்பூச்சி, *s.* As தேனீ. *(R.)*

தேன்வதை, *s.* [*prov.*] Honey-comb, தேனிருல்.

தை

தை. A syllabic letter, compounded of த் and ை.

தை, s. January, the month, ஓர்மாதம். 2. A sound in beating time, தாளக்குறிப்பி னொன்று. (c.) 3. The eighth lunar asterism, as பூசம். 4. Capricorn of the Zodiac, மகரராசி. 5. (R.) Juice and root of தைவேளை, which see.

தையீனப்புல்லுமில்லைமாசியிலுமாமில்லை..... There is no graminious plant, but ears in January; and no tree that does not blossom in February.

தைக்குரக்கன், s. [prov.] Watching millet sown in January.

தைச்சங்கிரமம், s. The entrance of the sun into Capricorn. See சங்கிரமம், சங்கிராந்தி.

தைச்செவ்வாய், s. [prov.] A Tuesday in January, auspicious.

தைப்பிறப்பு, s. [com. தைமாதப்பிறப்பு.] New year's day, astronomically; observed by boiling rice, to propitiate the favor of the sun, supposed to commence, at that time, his course northward.

தைப்பிறை, s. The new moon as seen in January; observed to ascertain whether the year will be fruitful.

தைப்பூசம், s. The day when the moon is in the பூசம், in January, being an auspicious time for eating the first rice, bathing, and taking oblations to the temple.

தைப்பொங்கல், s. The festival of boiling rice in cow's milk. See தைப்பிறப்பு.

தையறம், s. [prov.] The drying up of the rivers in January.

தை, றேன், ந்தேன், வேன், ய, v. a. To adorn, to beautify, அலங்கரிக்க. (சது.)

தைதல், v. noun. Embellishment.

தை, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, v. a. To sew, stitch, seam, make, as an article of dress, by sewing; to mend, &c., தன்ன. 2. To nail, to fasten boards, beams, &c., with nails, spikes, or pegs; to pin, to skewer, to run leaves together, ஆணிமுதலியனதைக்க. 3. To net with a netting needle, வலிபின்ன. 4. [with தொகை.] To cast or add up; to close an account, as தொகைதைக்க. As v. n. க்கிறது, த்தது, க்கும், க்க,—in the 3d pers. neut. To pierce, to penetrate; to enter—as a thorn, arrow, ball or shot, முள்ளுமுதலியவை. 2. (fig.) To strike, or pierce the mind — as a remonstrance, reproof or sarcasm; to cause pain, remorse, &c., மனதிற்படிய. 3. To light on one, as the fascinating looks of a lover or the blighting looks of an unlucky person, திருஷ்டிபட. (c.)

அவன்கால்தூக்குவிலங்குதைக்கப்பட்டது. His feet are fastened with chains.

அவன்சொல்லவனுக்குந்தைத்தது. His word cut to the heart.

கண்ணுக்குத்தைத்தது. It was charming or attractive to the sight.

தைப்பான், appel. n. A needle, ஊசி. 2. One who sews, தைப்காரன்.

தைப்பை, s. A garment made by sewing, சட்டை. (சது.)

தையல், v. noun. Sewing, stitch, seam.

தையல்விட்டுப்போயிற்று — தையல்பிரித்துபோயிற்று. The seam of the garment is ripped.

தையல்வேலை, s. Stitching, needle work. பெரும்படித்தையல். Coarse sewing. நுணுக்கு. Nice or neat sewing. கெட்டித்தையல். A double seam.

தையலூசி, s. A sewing needle, in distinction from one for knitting.

தையல்தைக்க, inf. To sew.

தையல்பிரிக்க, inf. To rip open a seam.

தையற்காரன், s. [fem. தையற்காரி.] A tailor, a seamster, a sewer. 2. A knitter.

தையற்பை, s. A bag, as தையற்பெட்டி.

தையற்பெட்டி, s. A work basket or box containing things for needle work.

பீற்றல்தைக்க, inf. [also கந்தைபொத்த.] To mend a rent in a garment.

வலைதைக்க, inf. To mend nets.

தைப்பு—தைத்தல், v. noun. Sewing, nailing, joining two things together by sewing, or nailing, தைக்கை. 2. Stitching, piercing, உருவுகை.

*தைசதம், s. Belonging to fire, powerful, intense, அக்கினிசம்பந்தம். W. p. 385. Taijasa. 2. One of the three அகங்காரம், or active powers of the incorporated soul, that connected with சத்துவிகம் quality. The three அகங்காரம் as given in வெளுஞானசித்தி, are பூதாதியகங்காரம், வைகரியகங்காரம், தைசதகங்காரம், which see in their places.

தைசதஅகங்காரம் — தைசதாகங்காரம், s. The first of the three அகங்காரம்.

*தைதுலம்—தைதூலி, s. (St. தைலிகம்.) The fourth astrological karna, ஓர்காணம்.

*தைத்தியர், s. The Asuras, அசுரர், or Titans, of Hindu mythology, நிருமைத்தர். See நிரு. W. p. 424. Daitya.

தைத்தியபுரோகிதன்—வைத்தியமந்திரி, s. Venus the planet, or the regent of the planet as counsellor of the Asuras, சுக்கிரன்.

தைத்தியாரி, s. Vishnu, விஷ்ணு; [ex அரி, destroyer.]

*தைத்திரியம், s. The second of the four Vedas, இரண்டாம்வேதம்; also one of the Upanishads. See உபநிடதம். W. p. 385. Taittiriya.

தைப்பை, s. See தை, v. a.

தையல், s. Beauty, fairness, gracefulness, handsomeness, அழகு. 2. One of the fair sex, a woman, பெண். (சது.) See தை, v. a.

*தைரியம், s. [sometimes தயிரியம்.] Steadiness, courage, encouragement, confidence, &c., தனிவு. W. p. 447. Dhairya. 2. A horse's trot, குதிரையின்செலைநடை. (Sa. Dhowrya.)

தைரியக்காரன் — தைரியசாலி, s. A courageous person.

தைரியங்கொடுக்க, inf. To animate, to encourage, to embolden.

தைரியங்கொள்ள — தைரியப்பட, inf. To take courage, to be encouraged, to cheer up.

தைரியஞ்சொல்ல, inf. To encourage by advice.

தைரியலட்சுமி, s. Lukshmi, as the goddess of valor. See இலட்சுமி.

தைரியவான், s, A courageous man, as தைரியசாலி.

மனத்தைரியம், s. Fortitude, courage.

*தைலம், s. [also தயிலம்.] Gingely oil; oil from Sesamum, கல்லெண்ணெய். W. p. 385. Taila. 2. Oil, unguent, எண்ணெய். 3. Fragrant oil, essential vegetable oil, balsam, medicinal oil, tincture, மருத்தெண்ணெய். 4. An oil, or balsam for anointing, அபிஷேகதைலம். 5. The sap of a tree or plant, சாரம். 6. (fig.) Strength, சத்து. (c.) இம்மரம்தைலஞ்செத்தது. The tree has lost its juice or strength.

தைலக்காப்பு, v. noun. Anointing an idol, &c., with fragrant oil. See எண்ணெய்க்காப்பு.

தைலக்காரன், s. An apothecary, தைலம்விற்பான்.

தைலங்கூட்ட, inf. To distil essential oil.

தைலபீதம், s. The gum of the red wooded or country fig-tree, அத்திப்பிசின், Ficus racemosa.

தைலமாட்ட, inf. To anoint the head or body, எண்ணெய்க்காப்பிட. 2. To embalm a dead body, பிரேதலக்காரம்பண்ண. (p.)

தைலமிட—தைலம்பூச, inf. To rub oil on the body.

தைலமிறக்க—தைலமெடுக்க, inf. To extract or distil medicinal or fragrant oils. 2. To deprive one of ability, bodily, pecuniary, &c., சத்தெடுக்க.

தைலம்வடிக்க, inf. As தைலமிறக்க.

தைலாபிஷேகம், s. As தைலக்காப்பு.

பரிமளதைலம், s. Sweet ointment, perfume.

தைலா, s. (Port.) A wooden box, trunk, மரப்பெட்டி. (Jaffna usage.)

தைலாங்குருவி, s. A small bird. See தலையின்குருவி. (c.)

தைலி, s. (Hind.) A purse, பணப்பை.

*தைவதம், s. Divinity. See தெய்வதம். 2. See நிஷாதம்.

தைவரல் — தைவருதல், v. noun. Shampooing, softly pressing and stroking the limbs with the hands. See தடவர. (p.)

*தைவிகம்—தைவீகம், s. Relating to the gods, divine, தெய்வீகம். W. p. 426. Daivika.

தைவிளை—தைவேளை, s. The name of a plant called அசண்டி, Cleome felina, L.

*தைவேத்தினம், s. Divine interposition, &c., as தெய்வேத்தினம்.

தைனந்து, s. (Arab.) Appointment, attendance, service; also the person.

தைனந்துச்சேவகன், s. A volunteer peon.

*தைனியம், s. [also தயினியம்.] Lowness, humbleness, submissiveness, எளிமை. 2. Nigardliness, covetousness, உலோபம். W. p. 425. Dainya.

தைனியவசனம், s. Submissive language, வணக்கமானசொல்.

தொ

தொ. A compound letter of த் and ஒ.

தொகம், *s.* An estimate, a total, மதிப்பு.

தொகக்காரன், *s.* One who estimates.

தொகம்பார்க்க, *inf.* To value the produce of a field. *(Gov. usage.)*

தொகு, இறது, தொக்கது, தொகும், தொக, *v. n.* To assemble, to collect, or be collected together, to accumulate, கூட. 2. To form as a whole, an aggregate, a lump, திர. 3. To be summed up, to be brought into a total, தொகையாக. 4. To become concentrated, or united in one, to be brought to a focus, to converge as rays, குவிய. 5. To be omitted, as a particle in the combination of words, வேற்றுமையுருபுமுதலியவறை. 6. To be contracted, as a word; to be omitted, as a letter, or letters in the beginning or end of a word, சுருங்க.

தொகப்படுவது, *appel. n.* Ellipsis or contraction.

தொகல், *v. noun.* Collection, assemblage, joining, கூடல்.

தொகாநிலை—தொகாநிலைத்தொடர், *s.* [*in gram.*] The connexion of a word with its பயனிலை, or that with which it makes sense, without ellipsis, contraction, &c., வினை உருபுமுதலியவிற்குரிற்றல்.—It embraces nine varieties; 1. முற்று, finite verbs with their nominatives, as வந்தான்சாத்தன், Sattan came. 2. பெயரெச்சம், relative participle, and its noun, as வந்தசாத்தன், Sattan who came. 3. வினையெச்சம், verbal participles with their finite verb, &c., as வந்துபோனான், he came and returned. 4. எழுவாய், the nominative and its verb, as சாத்தன்வந்தான், Sattan came. 5. விளி, the vocative and its verb, as, சாத்தாவா, come Satta. 6. இரண்டாவதுமுதலிய ஆறு வேற்றுமையின் உருபு, the six oblique cases (the vocative excepted), with their பயனிலை, as சோறைபுண்டான், he ate the rice; மகனெச் சென்றான், he went with his son; சாத்தற்குமகன், son to Sattan; மலையின்வீழருவி, cataract falling from the hills; சாத்தனதகை, Sattan's hand; குன்றத்தின்கட்கூகை, owl in a hill. 7. இடை, particles with their nouns, or verbs, as பொன்னன்னகுதிரை, A horse like gold. 8. உரி, adjectives or adverbs with their nouns or verbs, as மாபிரஞலம், very glorious world, சாலப்பகை, great enmity. 9. அடுக்கு, the repetition of the same word for emphasis, &c., as பாம்புபாம்பு, snake, snake; நீத்தீ, fire, fire, &c.

தொகுதி, *s.* A series or class of persons, things, &c., கூட்டம். 2. A society, association, மக்கட்குழு. 3. A flock, herd, swarm, &c., விலங்கின்குழு. 4. Genus, aggregate, பிண்டம். 5. A quantity, collection, accumulation, திரட்சி. (*p.*)

தொகுதிப்பெயர், *s.* A noun of multitude, குழுஉப்பெயர்.

தொகு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To assemble, to collect together, to accumulate, கூட்ட. 2. To classify, to arrange in class, திரைக்க. 3. To sum up, to reduce to a total, to abridge, to abbreviate, தொகைசெய்ய. (*c.*) 4. To omit a letter or letters in the beginning, middle, or end of a word, முதலிடைடைகுறைக்க. 5. To estimate, மதிக்க.

தொகுத்துக்காட்ட, *inf.* To give the sum or substance of a thing, or transaction.

தொகுத்துச்சுட்டல், *v. noun.* Mentioning, or opening a subject about to be treated of; one of the thirty-two உத்தி.

தொகுத்துச்சொல்ல, *inf.* To state in brief, to give a summary. 2. To mention particularly, to particularize.

தொகுத்துப்பார்க்க, *inf.* To view things in the aggregate, as a whole, &c.

தொகுத்துரை, *s.* A free rendering of the text. See உரை.

தொகுப்பு, *v. noun.* The sum, total, தொகை, (*c.*)

தொகை, *s.* Assembly, collection, கூட்டம். 2. Sum, amount, total, தொகுதி. 3. Property, stock, money, பணமுருப்பு. 4. Summary, aggregate, epitome, compend, substance of a narrative, abstract of a subject; genus, as including species; general subjects combined, whether analytically or synthetically, சுருக்கம். 5. Assortment, இனமடைப்பு. 6. Article, item, particulars of an account, &c., எண்ணிலுறுப்பு. (*c.*) 7. [*in gram.*] Omission of a particle in the combination of words, as தொட்டநாத்த, for தொட்டஅநாத்த, as far as day, தொகுத்தல் விகாரம். 8. Elliptical combination of words, as பொன்கொணர்ந்தான், for பொன்னைக்கொணர்ந்தான், he brought the gold. (See தொகைநிலை.) 9. The main division of a treatise, as distinguished from வகை or விரி, அதுவகைசுருக்கிரிந்தொன்று.

தொகைபிசகிப்போயிற்று. The calculation is erroneous.

தொகைகட்ட, *inf.* To finish, to conclude, to bring to an end. 2. To deliver up, to make over, as money, &c., to make a final payment. 3. To sum up, to make a total, to make out the total, to cast up.

தொகைகாட்ட, *inf.* To give a written account. 2. To state a particular number or sum. 3. To make a sum appear large, to magnify. 4. *v. n.* To appear large, as an amount.

தொகைகூட்ட, *inf.* To add up.

தொகைக்காரன், *s.* A man of considerable property, தனவான். (*c.*)

தொகைச்சூத்திரம், *s.* One of the six kinds of rules for composition. See சூத்திரம்.

தொகைதைக்க, *inf.* To make out the grand total of an account. See தை, *v.*

தொகைநிலை, *s.* A summary, contraction, ellipsis, &c., சுருக்கிரிற்கை. 2. [*in gram.*] The connection of a word with the பயனிலை by omitting a particle, வேற்றுமையுருபுமுதலியதொக்குரிற்றல்.—It embraces six varieties; 1. வேற்றுமைத்தொகை, the omission of the sign or form of the case, as பொன்கொடுத்தான், for பொன்னைக்கொடுத்தான். 2. வினைத்தொகை, a verb without the sign of the tense, combined with a noun, as கொல்புலி for கொன்றபுலி, கொல்கின்றபுலி, கொல்லும்புலி. 3. பண்புத்தொகை, omission of the adjective sign ஆகிய or ஆய in combining the qualifying epithet with the noun, as சுருங்குவிர for சுருமையாகியகுவிர, or two nouns in apposition, as ஆபிசன். 4. உவமைத்தொகை, the combination of two words with the omission of the sign of comparison, as பான்மொழி for பால்போலுமொழி. 5. உம்மைத்தொகை, omission of the particle உம், as சபிலபாணர் for சபிலனும்பாணனும்; also இராப்பகல் for இராவும், பகலும். —*Note.* In this combination, there is commonly no reduplication. 6. அன்மொழித்தொகை, a metonomy or omission of a word, commonly the name of a person, immediately after any of the five preceeding ellipses, as பொற்றொடி for பொற்றொடியையுடையாள், the golden bracelet-damsel.

தொகைநிலைச்செய்யுள், *s.* A poem consisting of a fixed, even number of verses, ஓரினப்பாத்தம்.

தொகைநிலைத்தொடர்மொழி, *s.* As உவமைத்தொகை. (*R.*)

தொகைநிலையுருவகம், *s.* [*in rheto.*] A perfect metaphor, நூலலங்காரம்.

தொகைபடுவது, *appel. n.* Contraction of words, as தொகப்படுவது.

தொகைபார்க்க, *inf.* To sum or cast up the amount. (*c.*)

தொகையுட்ட, *inf.* [*prov.*] To balance accounts, to strike a balance, கணக்குசரிக்கட்ட. 2. As தொகைதைக்க.

தொகைப்படுத்த—தொகையாக்க, *inf.* To make up an even number. 2. To make a large sum. 3. To sum up; to reduce to heads.

தொகைப்பிசகு — தொகைமோசம், *s.* An error in a reckoning. 2. (*fig.*) A mistake, a blunder.

தொகைப்பொருள், *s.* Recapitulation; விரித்தபொருளின்அடக்கம்.

தொகைமோசம், *s.* See தொகைப்பிசகு.

தொகையகராதி, *s.* One of the four divisions of சதுரகராதி, which see.

தொகையுருவகம், *s.* As பண்புத்தொகை. (*R.*)

தொகையுவமம், *s.* Contraction of metaphor. See உவமைத்தொகை.

தொகையேற்ற, *inf.* To make a large sum, by the addition of many small items, commonly as a debt. 2. As தொகைகூட்ட. (*c.*)

*தொகையேறுதல், *v. noun.* Swelling to a large sum by the addition of many items. 2. Forming a total, an amount.

தொகைவகை, *s.* Head and divisions of a subject.

தொகைவகைகிளி, *s.* Heads of a subject, its general divisions, and discussion, &c.

தொகைவிரி, *s.* Head of subject and the discussion.

தொக்க, *rel. parti.* Joined, united, சேர்த்; [*ex* தொகு, *v. n.*] (*p.*)

தொக்கமனிதர், *s.* Assembled men.

தொக்கடம், *s. (Tel* తొక్కు-టము.) Pressing, pounding, treading down, மிதித்தல்முதலியன.

தொக்கடம்போட, *inf.* To squeeze the limbs in order to remove pain. 2. To express the juice of leaves by squeezing, கசக்கொழுபிழிய.

தொக்கடவு, *s.* [*prov.*] A cross-way, a shorter way than the common road, குறுக்குவழி. (*c.*)

தொக்கடி—தொக்கட்டி, *s.* [*prov.*] A kind of basket made of olas to protect fruit on the tree, ஓலைக்குடலை. 2. A small ola-basket for fruit, தெகடை. 3. A small hut for watchers in a field, காவற்குடிசை.

தொக்கடை, *s. (Tel.)* Poverty, want, வறுமை.

தொக்கடைப்பட, *inf.* To suffer want.

தொக்கம், *s. (For.)* A law-suit, வழக்கு.

தொக்கக்காரன், *s.* A litigious man.

தொக்கம், *s.* Any thing eaten adhering to the bowels. See தொக்கல். [*ex* தொக்கு.]

குழந்தையபிற்றில்தொக்கம்பிறிதை. Some thing sticks in the child's bowels.

தொக்கிடம், *s.* Pressing the body, in anointing before bathing. *(O. Dic.)*

தொக்கார், *s.* [*plu.*] People assembled, assembly, company. 2. Friends, adherents, சேரர்; [*ex* தொகு, *v.*] (*p.*)

தொக்கு, *s.* A small matter, அற்பம், (*c.*)

தொக்காய்ப் போகாது—தொக்கிலேபோகாது. It will not be trifling, it will not pass with impunity.

தொக்குந்தொடிசலைக்காமலெடுத்துப்போ..... Take it all away, leave nothing.

தொக்குக்கண்டுகொள்ள, *inf.* To disregard, to treat one meanly.

*தொக்கு, *s.* (*St.* துவக்கு.) Skin, cuticle, surface of the body, as one of the five organs of sense, தோல். (*Met.*) raiment. (See அக்குத்தொக்கில்லாதவன்.) W. p. 393. TYAK. 2. The bark of a tree, மரப்பட்டை. 3. (*சத.*) Body, சரீரம்.

தொக்கிந்திரியம், *s.* The sense of feeling.

தொக்குத்தொக்கெனல், *v. noun.* The creaking of shoes, &c., சரக்கொலிக்குறிப்பு. (*c.*)

தொக்குத்தொக்கென்றுநடக்க, *inf.* To walk, making a noise—as with shoes. 2. To walk fast and with a rocking motion, as a corpulent person, &c.

தொக்குநிற்றல், *v. noun.* Being omitted or understood as a particle, &c., in language or combination. See தொகைநிலை. [*ex* தொகு, *v.*]

தொங்கணி, *s.* A pendent ornament, தூக்கணி; [*ex* தொங்கு, *et* அணி.]

தொங்கல், *s.* Any thing pendent, hanging, &c., தொங்குதல். 2. A pendent part of an ornament, ஆபரணத்திற்றொங்கணி. 3. End or corner of a woman's cloth, either hanging or brought up round the neck; end of a man's cloth thrown over the shoulder, முன்னே. 4. [*prov.*] Any thing stuck or hanging, ready to fall, ஒட்டிப் புதிவிருத்தல். 5. A thing eaten adhering to the bowels, தக்கல். 6. An ear-ornament in general, காதணி. 7. Hangings or fringes of cloth, shawl, &c., தூக்கங்கள். (*c.*) 8. A flower garland, பூமாலை. 9. Tail of a peacock, மயிற்றோகை. 10. A bunch of peacock's feathers, for a fan or parasol, பீலிக்குடை. 11. A white umbrella, being an emblem of royalty, வெண்குடை. 12. End, extremity, projection, cape. headland, promontory; end of a street, முனை. 13. Men's hair, ஆண்மயிர். (*சத.*)

தொங்கலுக்குதொக்கல். At every corner.

தொங்கலிலேமுடிய, *inf.* To tie up in the end of a cloth.

தொங்கலுக்குப்பார்க்க, *inf.* To try to remove an obstruction in the bowels by magic.

தொங்கல்போட — தொங்கல்விட, *inf.* [*prov.*] To put the end of the cloth over the shoulder, as a woman.

தொங்கன், *s.* [*fem.* தொங்கி.] A thief, a rogue, கள்வன்; [*ex Tel.* దొంగ.]

*தொங்கிசம், *s. (St.* துவங்கிசம்.) Loss, destruction, damage, detriment, injury, கேடு. (*c.*)

அவன்மெத்தவுந்தொங்கிசப்பிருன்.....He is much straitened.

தொங்கு, கிறேன், தொங்கினேன், வேன், தொங்க, *v. n.* To hang, to be suspended, to hang down, to stick, or hang, ready to fall; to dangle, தூங்க. 2. To adhere as any thing to the bowels, தக்க. 3. (*fig.*) To remain long with one, as another's property, நிலுவைப்பட. (*c.*) 4. To move with leaps —as a child skipping, or a beast galloping, குதிக்க. 5. [*in burlesque.*] To run away, to slip off (to die) with வீதல், or போகுதல்; குழூஉக்குறி.—Most of the compounds are limited to Jaffna.

தொங்காரப்பாய்ச்சல், *v. noun.* A jolting pace, jumping movement, gallop of a horse, குதிரையோட்டம்.

தொங்கிப்பாய, *inf.* To rise high in walking, to gallop, to skip. 2. (*fig.*) To be haughty, to assume airs.

தொங்கிப்போக, *inf.* To be lodged and lost as a thing thrown. 2. (*fig.*) To be in another's possession, to be lost, to be unjustly appropriated—as a deposit, to become burdensome as a debt. 3. To tarry in the road from fatigue. (*c.*) 4. [*in cant.*] To die. 4. [*prov.*] To run away.

தொங்கிவிழ, *inf.* To jump and tumble down. 2. To be haughty, to be exposed to fall.

தொங்குகாது, *s.* Hanging ears. *(c.)*

தொங்குபறிவு—தொங்குபொறி—தொங்குபொறிவு, *v. noun.* [*prov.*] Hanging just ready to fall; to slip off; to turn over, ஒட்டியும்ஒட்டாதிருத்தல். 2. (*fig.*) Ready or waiting for a pretext to leave a company, விலகுதற்கேதுப்பார்த்தல்.

தொங்குகிழவன், *s.* A decrepit, old man. (*R.*)

தொங்குபுளுகன், *s.* [*prov.*] A vain person, who walks with a conceited springing gait, பெரும்புளுகன்.

தொடக்கம், *s.* Beginning, commencement, origin, ஆதி. (*சத.*) 2. Undertaking, entrance upon, தொடங்குகை. 3. Means for an end, எத்தினம்; [*ex* தொடக்கு, *v.*] (*c.*)

இத்தொடக்கத்தன. And so forth. (*p.*)

தொடக்கஞ்செய்ய, *inf.* To begin, to commence, to enter.

தொடக்கு, *s.* The uncleanness of a woman in her menses and in child-bed, மகளிர்குதகம். (See தடக்கு.) 2. Entanglement, tying, binding, கட்டு. 3. Connexion, concern, பற்று. *Sometimes* தடக்கு. 4. (*R.*) A kind of ornament, தொடக்குவடிவு.

தொடக்கு, கிறேன், வேன், தொடக்க, *v. a.* [*also* தடக்கு] To tie, கட்ட. 2. To entangle, சிக்குப்படுத்த. 3. [*vul.*] To begin, தொடங்க. 4. To make to agree, பொருத்த.

தொடங்கு, *s.* [*prov.*] [*also* தடங்கு.] Stocks for confinement, விலக்கு. 2. A jewel for the foot, சரணி.

தொடங்கு, கிறேன், தொடங்கினேன், வேன், தொடக்க, *v. a.* and *v. n.* [*improp.* தடக்கு.] To begin, to commence, to originate, ஆரம்பிக்க. 2. To undertake, to enter upon, to engage in, முயல. (*c.*)

தொடாரி, *s. (also* தூடரி.) A shrub. See தொடர், *v.*

தொடர், *s.* Yarn, cotton thread, பஞ்சினூல். 2. Gum, glue, பிசின். 3. Flower garland, பூமாலை. 4. Chain, சங்கிலி. 5. Fetter, விலக்கு. 6. (*fig.*) Love. (*Beschi.*) 7. Antiquity, lineal succession, பழமை. 8. Following, succession, connection, series, பின்சேறல். 9. Phrase, sentence, words forming a complete idea, சொற்றொடர்.

தொடர்ச்சொல்—தொடர்மொழி, *s.* A compound word; also a phrase, clause, sentence.

தொடர்ச்சொற்புணர்த்தல், *v. noun.* Combining or giving rules for the composition of words; one of the thirty-two உத்தி.

தொடர்ப்பாடு, *v. noun.* Connexion, attachment, சம்பந்தம்.

தொடர், கிறேன், ந்தேன், வேன், தொடர, *v a.* To succeed each other reciprocally as the tree and seed, the body and its actions, and *vice versa*, பிரிவிருட்சவியபமாத் தொடர. 2. To proceed or succeed each other—as letters in the formation of words, &c., எழுத்துமுதலியதொடர. 3. To follow continually, to continue, இடைபருதவர. 4. To insist, to engage with energy, முயல. 5. To follow, to attend as on a great man, to pursue, பின்செல்ல. 6. To seek, to go in quest of, to apply to from day to day, தேட. 7. To follow in order, in unbroken succession, &c., தொடர்ந்திந்த. 8. To prosecute, to claim in law, to sue, வழக்காட. (*c.*) 9. To connect, to tie, to bind, கட்ட. 10. To assail, to attack, தாவ.

சருவத்திற்றொடர்ந்திருன். He perseveres in his undertakings.

தொட்ராமுறி, *s.* A deed of renunciation or relinquishment, an agreement not to prosecute in law, வியெலப்பத்திரம். (*c.*)

தொடரி, *appel. n.* A kind of thorny shrub whose fruit is edible, Rhamnus circumcissus, *L.* See முன்றொடரி and பின்றொடரி.

தொடரெழுத்து, *s.* A letter elided or changed in the combination of words according to the rules of permutation, தொடர்ந்துவருமெழுத்து, as அவனிருந்தான், for அவன் இருந்தான், and வந்தடித்தான்—for வந்து அடித்தான்.

தொடர்நிலைச்செய்யுள், *s.* A poem in which several connected actions are related, epic poetry, தொடைச்செய்யுள்.

தொடர்ந்தஅன்பு, *s.* Continued love. (*R.*)

தொடர்ந்தார்—தொடர்ந்தோர், *appel. n.* (*plu.*) Friends, companions, மித்திரர்.

தொடர்ந்துநிரிய, *inf.* To be constantly about with one. 2. To pursue an object with unremitted application. (*c.*)

தொடர்ந்துபழிசெய்ய, *inf.* To injure one without provocation.

தொடர்ந்துபிடிக்க, *inf.* To overtake. 2. To seek diligently and find.

தொடர்ந்துபேச, *inf.* To continue speaking.

தொடர்ந்துபோக, *inf.* To pursue, follow after one.

தொடர்ந்தேற்றி, *s.* [*prov.*] Perseverance, persistence, repetition, விடாமுயற்சி.

தொடர்ச்சி, *v. noun.* Pursuit, continuance. (*met.*) effect or consequence. (*Beschi.*) 2. Claim in law-suit, வழக்குத் தொடர்ச்சி. 3. Cluster of flowers, bunch of flowers, பூங்கொத்து. 4. Perseverance, முயற்சி. 5. Demoniacal possession, பேய்த் தொடர்ச்சி. For other meanings, see தொடர்பு. (*c.*)

எனக்கும்அவருக்கும்ஒருதொடர்ச்சியுமில்லை. I have no connexion with him, I have no claim on him.

தொடர்ச்சிக்காரன், *s.* [*in law.*] A claimant, a prosecutor, a plaintiff.

தொடர்ச்சிபண்ண, *inf.* To prosecute in law, to claim, to sue.

தொடர்ச்சியானகாரியம், *s.* An actionable matter.

தொடர்ச்சியாய்ச்செய்துவர, *inf.* To persevere in an undertaking.

தொடர்பு—தொடர்வு, *v. noun.* Continuance, succession, தொடர்ச்சி. 2. Series, tissue, train, range, chain, சங்கிலித்தொடர். 3. Friendship, constancy in friendship, attachment. நேசம். 4. Relationship, connexion by consanguinity, or affinity, உறவு. 5. Antiquity, hereditary succession. 6. Lineal descent, பரம்பரைத்தொடர்பு. 7. Regular succession following one another, முறைமை. 8. Reciprocal succession, as the tree and its seed, and the contrary, பீசவிருட்சவியமமாம்பந்தொடர்கை. 9. Connexion, as of liquid particles, &c., ஒட்டுகை. (*c.*) 10. Verse, poetry, பா.

தொடர்மொழி, *s.* Compound words. See தொடர்ச்சொல்.

தொடலை, *s.* A garland, மாலை; [*ex* தொடு, *v.*] 2. Females' play, மகளிர்விளையாட்டு. 3. Play in general, விளையாட்டு. (*சது.*)

தொடி, *s.* A bracelet or bangle, கை வளை. 2. Another kind of arm-ring, கட்கணம்; [*ex* தொடு, *v. a.*] 3. A weight, the பலம். (*சது.*)

பைந்தொடி—பொற்றொடி. A lady with golden bracelets. (*p.*)

தொடிஞெ, *s.* Connexion, concubinage, sexual intercourse, சம்பந்தம். See தொகை.

தொடித்தலைவிழுத்தண்டினார், *s.* One of the forty-nine professors of the Madura college, whose encomiastic stanza on the Cural has preserved his name from oblivion. சங்கப்புலவரிலொருவர்.

தொடு, *s.* Garden, தோட்டம். 2. Field, tilled land, agricultural land, மருதநிலம். 3. Deceit, guile, வஞ்சம். (*சது.*)

தொடுகடிகடிக்க, *inf.* [*prov.*] To graze, to crop off the tops of grass, மேய்கடிகாகடித்தமேய. 2. To pick out food, to eat daintily, வேண்டாவெறுப்பாயுண்ண.

தொடுக்கம், *s.* Gold, பொன். (*சது.*)

தொடுகை, *s.* (*Tel.* ஜோடு.) Connexion, ஒட்டு. 2. Concubinage, சம்பந்தம். (*c.*)

இவளுக்குஅவன்தொகை. She is his concubine.

தொடு, கிறேன், தொட்டேன், வேன், தொட, *v. a.* To touch, to come in contact with, to feel, to perceive by the touch, பரிசிக்க. 2. To handle, to take hold of, to finger, to use, பிடிக்க. 3. To be connected or united, to be joined, &c., பொருந்த. 4. To begin, தொடங்க. (*c.*) 5. To discharge an arrow or other missile weapon, அம்பெய்ய. 6. To eat, உண்ண. 7. To dig, to scoop out, to excavate, தோண்ட. 8. To put on shoes or a garment, தரிக்க.

தொட்டார்நேருன்விட்டார்யாருன். A friend if persevered in, and a foe if neglected; *spoken of an art.*

தொடப்படாது. I cannot give you; (*lit.*) cannot touch.

தொட்டுக்கண்ணிலே பொற்றிக்கொள்ள.....To touch the feet of an idol or great person and then apply the fingers, to the eyes; as if saying, "I worship your feet." 2. [*in contempt.*] To be too obsequious, or submissive.

ஆகாசத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. The top of trees, &c., touches the sky.

தோஷந்தொட்டிருக்கிறது. Fatal symptoms have appeared (as in cholera, &c., before death).

நிலந்தொட்டுவைத்தார்கள். They rubbed the sand in which they had written (on their forehead, eyes, and breast).—*Note.* This is done in homage to Ganesa or Sarasvati.

சனியன் தொட்டுக்கொண்டது. Saturn has begun to exert his malign influence.

செருப்புத்தொட்டுக்கொண்டுநடக்க, *inf.* To walk with sandals.

தொடுகழல், *s.* A pair of Indian slippers, as தொடுசெருப்பு. (*p.*)

தொடுகழன்மறவர், *s.* (*plu.*) Heroes who wear ankle rings. 2. Huntsmen with sandals. (*p.*)

தொடுகை, s. Touch, பரிசம். 2. *v. noun.* Digging, தோண்கை.

தொடுகிலும், [*prov.*] At all, in any wise, &c., used with a negative verb, ஒருபொழுதும்.

தொடுசெருப்பு, *s.* As தொடுகழல். (*c.*)

தொடுபதம், *s.* Boiled rice, சோறு. (*சது.*)

தொடுவாய், *s.* [*prov.*] Confluence or junction of two rivers, or of a river with the sea, தண்ணீர்கள்சந்திக்குமிடம்.

தொடுவான், *s.* [*prov.*] The horizon, அடிவானம்; [*ex* வான், the heavens.]

தொடல், *v. noun.* Being close, சார்தல். 2. Touching, நிண்டல். 3. Digging, தோண்டல். 4. Catching, பிடித்தல். 5. Eating, புசித்தல்.

தொட்டடி, *s.* [*properly* தொட்டஅடி.] The beginning line—oppos. to விட்டடி.

தொட்டப்பன், *s.* [*prov.*] A godfather.

தொட்டாய்ச்சி, *s.* A godmother. (*Chris. usage.*)

தொட்டல், *v. noun.* Digging, தோண்டல்.

தொட்டு, [*verbal participle.*] Touching, concerning, in reference to. (See சட்டி.) 2. Beginning with, from, since; used as பற்றி and குறித்து to express relation. (*c.*)

அதைத்தொட்டு. Concerning that.

இளமைதொட்டு. From youth up.

அன்றுதொட்டு. From, or since, that day. 2. From former times.

தொன்றுதொட்டு. From time immemorial. (*p.*)

தொட்டுக்கொண்டிருக்க — தொட்டுக் கொண்டிருக்க, *inf.* To be in contact with, contiguous.

தொட்டுக்கொண்டுபோக, *inf.* To pretend to carry a load, with others. 2. To touch the bier, as near relations, in a funeral procession. 3. To bear a pall at a funeral.

தொட்டுத்தலைமேல்வைக்க, *inf.* To touch the feet of a great person; also to put the hands on the head, in token of veneration.

தொட்டுத்தெளிக்க, *inf.* As தொட்டுத் தெறிக்க. 2. See தெளி, *v. a.*

தொட்டுத்தெறிக்க, *inf.* To dip the finger in a liquid and sprinkle it on a new married couple, or an idol, as in ஆலாத்தி. See தெறி, *v.*

தொட்டுப்பார்க்க, *inf.* To ascertain by the touch.

தொடு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To connect, to join, to communicate with, சேர்க்க. 2. To bind, to fasten, to tie; to link or tie together; to attach; to continue a series, கட்ட. 3. To set in, to fix, to place, as the arrow in the bow; to discharge arrows, அம்புதொடுக்க. 4. [*prov.*] To exercise love, hatred, &c., to cherish, to foster, மனதில்வைக்க. 5. To set on foot, to commence, to enter on, தொடங்க. 6. To join slightly—as boards or threads; to do work superficially; to put on clothes negligently; to put on a garment or ornament, இலேசாய்த்தொடுக்க. 7. [*in burlesque with* விட.] To bring together a man and woman, *commonly clandestinely,* பொருத்த. 8. To put on or wear sandals, slippers or clogs, செருப்புத்தொடுக்க. 9. To carry on a licentious intrigue, பெண்ணேசெம்பக் தஞ்செய்ய. (*c.*) 10. To frame, to form, உருவாக்க. 11. To fabricate, to forge, to form a false story, கட்டுக்கதைகட்ட. 12. To make verses, to compose poetry, பாத்தொடுக்க. 13. To bend, வளைக்க.

அன்றுதொடுத்து. From, or ever since, that day.

அவ்விடந்தொடுத்து. From that place.

தொடுகயிறு, *s.* A rope used in ploughing.

தொடுதோல், *s.* Sandals, slippers, as தொடுசெருப்பு.

தொடுத்தபேச்சு, *s.* Connected speech, a sentence connected with the context.

தொடுத்தக்கட்ட, *inf.* To fasten together, as beasts, &c. (*c.*) 2. To fabricate a story, கதைகட்ட.

தொடுத்துவிட, *inf.* To fasten beasts together. 2. To unite persons irregularly in marriage. 3. To put out an apprentice, &c.

தொடுத்துவைக்க, *inf.* To tie or fasten slightly.

தொடுவழக்கு, *s.* An unjust claim, an unjust prosecution, அநியாயவழக்கு. (*c.*)

தொடுவான்–தொடுவான்கயிறு, *s.* [*prov.*] A rope attached to a pole, with a swivel, in the threshing floor, to which the inner yoke of oxen is tied; the others being all tied ox to ox, பிணையடிமாட்டிலுள் ளணைக்கட்டுக்கயிறு.

தொடுவிலங்கு, *s.* Fetters confining two persons to each other, இருவரைத்தனிக்கும் விலங்கு.

சண்டைதொடுக்க, *inf.* To pick quarrels.

வழக்குத்தொடுக்க, *inf.* To institute a law-suit. 2. To sue one on false grounds.

தொடுப்பு, *v. noun.* A tie, bandage; fastening, joining, கட்டு. 2. Linking, joining by links, சங்கிலியிணை. 3. A loose joining, தளர்கட்டுகை. 4. Illicit intercourse between the sexes; coupling persons in marriage, &c., clandestinely, தொடை. 5. Close intimacy, keeping company with, சேர்க்கை. 6. Pursuit, prosecution, தொடர்ச்சி. 7. Implements for ploughing, கலப்பைமுதலியன. (*c.*) 8. A fabrication, forgery, கட்டுக்கதை. 9. Slander, aspersion, வெறும்பழங்கூறல். 10. Sandals, பாதரட்சை.

தொடுப்பெங்கே. Where is your paramour?

தொடுப்புக்கத்தி, *s.* A sword with an iron guard to cover the arm up to the elbow, ஓர்ஆயுதம். (*Old Dic.*)

தொடுப்புக்காரன், *s.* [*fem.* தொடுப்புக்காரி.] A lecherous person.

தொடுப்புண்டாயிருக்க, *inf.* To have illicit intercourse.

தொடுசு, *s.* See தொடிசு.

தொடுவி, *s.* A paddock, a lawn; inclosed ground near a house, கொல்லை. (*சது.*)

தொடுவை, *s.* [*prov.*] A thing joined or appended to another, தொடுத்திருக்கிறது. 2. A tame elephant to which a wild one is fastened to tame it, புதியயானையைப்பழக்கும் யானை. 3. [*in burlesque.*] An associate, a crony, பங்காளன். 4. A man and woman living in illicit intercourse, as தொடை. (*Jaffna usage.*)

தொடுவைவள்ளம், *s.* A boat attached to a dhoney.

தொடை, *s.* The thigh; in which sense, for butcher's meat, are, பெருந்தொடை, the upper part of the thigh; பின்னந்தொடை, a hind-quarter; முன்னந்தொடை, a fore-quarter of a sheep, &c. 2. Flower-garland, பூமாலை. 3. Bow-string, நாண். 4. Arrow, அம்பு. 5. Surrounding wall, bulwark, fortification, மதிற்றறை. 6. Block projecting from a wall to support a beam, சுவர்ப்புறத்தி லீண்டியுத்திரம். 7. A bunch of flowers, பூங் கொத்து. 8. Verse, poetry, பாட்டு. 9. A series, train, connexion, succession, tissue, composition, commonly poetic, தொடர்ச்சி. 10. Rhyme in poetry, செய்யுளுறுப்பினொன் று; [*ex* தொடு, *v.*]—There are five classes of rhyme, each containing eight varieties, and three single ones, making forty-three in all. The five classes are: 1. மோனை, மோனைத்தொடை, the rhyming of the initial letter of the line or foot through the stanza. The varieties of this class are: 1. அடிமோனை, முதன்மோனை, rhyming of the initial in the foot of each line. 2. இணைமோனை, of the first two feet in each line. 3. பொதிப்புமோனை, of every other foot. 4. ஒருஉமோனை, of the first and fourth foot. 5. கூழைமோனை, of all the feet in the line but the last. 6. மேற்கதுவாய்மோனை, in every foot but the second. 7. கீழ்க்கதுவாய்மோனை, of all the feet but the penultimate. 8. முற்றுமோனை, in every foot. II. இயைபு, இயைபுத்தொடை, the rhyming of the last feet or letters in the lines. The varieties are: 1. அடிஇயைபு, முதலியைபு, rhyming of the last letter of the first foot in each line. 2. இணையியைபு, of the last letter of the first two feet. 3. பொதிப்பியைபு, of the last letter of every other foot. 4. ஒருஉவியைபு, of the last letter in the first and fourth. 5. கூழை யியைபு, of the last letter in each foot except the last. 6. மேற்கதுவாயியைபு, in the last letter of every foot but the second. 7. கீழ்க்கதுவாயியைபு, of the last letter in every foot but the penultimate. 8. முற்றியைபு, of the last letter in all the feet. III. எதுகை, எதுகைத்தொடை, rhyming of the second letter of every line in the stanza, comprising, 1. அடியெதுகை, முதலெதுகை, rhyming of the second letter of the first foot in each line. 2. இணையெதுகை, in the second letter of the two feet. 3. பொதிப்பெதுகை, that of every other foot. 4. ஒருஉவெதுகை, that of the first and fourth. 5 கூழையெது கை, that of all but the last. 6. மேற்கதுவா யெதுகை, that of all but the second. 7. கீழ்க்கதுவாயெதுகை, that of all but the penultimate, 8. முற்றெதுகை, in the second letter of all the feet. IV. முரண், முரண்தொ டை, a kind of poetry consisting of words taken in contrast, or by antithesis, as இருள்பரந்தன்னமாநீர்மருங்கின், நிலவுகுவித்தன்னவெ ண்மணலொருசிறை, by the side of the waters, dark as the wide spread nocturnal gloom, the white sand appeared, as if the moonlight had formed itself into heaps. Of this there are eight varieties, as 1. அடிமுரண், முதன் முரண், contrast in the first foot of the lines, with one another. 2. இணைமுரண், that in the first two feet of the lines. 3. பொ திப்புமுரண், that in every other foot of the lines. 4. ஒருஉமுரண், that in the first and fourth. 5. கூழைமுரண், contrast in all but the last. 6. மேற்கதுவாய்முரண், in all but the second. 7. கீழ்க்கதுவாய்முரண், in all but the penultimate. 8. முற்றுமுரண், in all the feet. V. அளபெடைத்தொடை, rhyme formed by அளபெடை or lengthening a letter for a verse, which are of eight varieties, as 1. அடி யளபெடை, முதலளபெடை, forming of rhyme by அளபெடை, in the first foot of each line. 2. இணையளபெடை, in the first two feet. 3. பொ திப்பளபெடை in every other foot, 4. ஒருஉவள பெடை, in the first and fourth. 5. கூழையள பெடை, in all but the last. 6. மேற்கதுவாயள பெடை, in all but the second. 7. கீழ்க்கது வாயளபெடை, in all but the penultimate. 8. முற்றளபெடை, in all the feet. VI. அந்தாதி, அக்தாதித்தொடை, rhyme by the occurrence of the last syllable, word or words in the stanza as the first of the succeeding. VII. இரட்டைத்தொடை, by the repetition of the same in every foot through the line. VIII. செந்தொடை, poetry of numbers without rhyme, a kind of blank verse. For further particulars, see these in their respective places.

தொடைமுறியஅடிக்க, *inf.* To break one's thigh in beating him.

தொடைமேல்தொடைபோட, *inf.* To sit with one thigh on the other (*deemed impolite.*)

தொடைதட்டிவெள்ளாழர், *s.* [*in burlesque.*] Barbers.

தொடையகராதி, *s.* A division of சது ராதி, which see.

தொடையிலேதட்ட, *inf.* To strike the thigh in token of bravery, defiance, admiration, surprize, &c.

தொடையைகிள்ளிண்ட, *inf.* To pinch the thigh as a punishment of a school boy, &c.

தொடைவாழை, *s.* A tumor on the thigh near the groin. 2. [*prov.*] A shrub whose leaves are used to cure the tumor.

தொடைவாழைபுறப்பட்டுக்கிடக்கிறன். He lies sick of the thigh-tumor.

தொடைவிகற்பம், *s.* The different species or varieties of rhyme.

தொடையல், *s.* Garlands tied together, தொடுத்தமாலை. 2. A flower garland, பூமாலை. 3. A garland thrown over the head of an idol or great person, மாலை. (*சது.*) [*ex* தொடு.]

தொட்டம், *s.* [*prov.*] A little piece of ground. See தண்டி.

*தொட்டா, *s.* See துவட்டா.

தொட்டாட்டுமணியம் — தொட் டாட்டுவேலை, *s.* [*prov.*] Little jobs, easy employments given to a waiting servant, &c., குற்றேவல்.

தொட்டாய்ச்சி, *s.* [*prov.*] A godmother, ஞானத்தாய் See தொடு, *v.*

தொட்டி, *s.* A trough, manger, crib, பத்தல். 2. A cistern, reservoir, நீர்த்தொட்டி. 3. A square building with an open space in the centre, தொட்டிக்கட்டு. 4 [*loc.*] An enclosure for selling timber, fire-wood, &c., மரம்விறகுமுதலியனவிற்குமிடம். 5. [*prov.*] A small enclosure for selling oysters at the pearl-fishery, சிப்பிவிற்கும்இடம். 6. A fence, a yard, a pound, வேலியடைப்பு. 7. (*R.*) Default of workmen, அபாதம்.—*Note.* There are different combinations with தொட்டி, as மண்தொட்டி, of earth; இருப்புத்தொட்டி, of iron; செப்புத்தொட்டி, of copper; பொற்றொட்டி, of gold; கல்தொட்டி, of stone; மரத்தொட்டி, of wood; சுண்ணும்புத்தொட்டி, a trough for macerating chunam.

தொட்டிக்கலவடை, *s.* See கலவடை.

தொட்டிக்கால், *s.* A bandy-leg, படப்புக்கால்.

தொட்டிக்காலன், *s.* A bandy-legged person.

தொட்டிப்பணம், *s.* A fine for default of workmen. (*Beschi.*)

தொட்டிவயிறு, *s.* A paunch belly.

புற்றொட்டி, *s.* A crib for grass or hay; [*ex* புல்.]

தொட்டிச்சி, *s.* A female of the தொட்டியர் caste. (*c.*)

தொட்டிப்பாஷாணம், *s.* Red arsenic, orpiment, ஓர்பாஷாணம்.

மூழ், *s.* [*prov. corrup. of* முகிழ்.] The opening bud of a flower.

மூழ்கு, கிறேன், மூழ்கினேன், வேன், மூழ்க, *v. n.* [*poetic form of* முழுகு.] To bathe, submerge, rise above and cover as water. 2. To sink as a ship, அமிழ்த. 3. To be ruined, கெட.

மூழ்கல், *v. noun.* Bathing. (சது.) 2. Sinking. 3. Perishing.

மூழ்த்து, கிறேன், மூழ்த்தினேன், வேன், மூழ்த்த, *v. a.* [*com.* முழுத்து.] To press or heap upon, அமிழ்த்த, மொய்க்க. (சது.)

*மூளி, *s.* A person defective in any part or member, உறுப்புக்குறை. 2. Anything split or broken, பின்னமானது. 3. [*fig.*] One who wears no jewels in the ear.

மூளிக்காதனேவந்தான்.....She came with naked ears.

மூளிக்காதன், *s.* An earless person. 2. [*fig.*] A மூளி man, as மூளி, 3.

மூளிக்காதுள்ள, Earless.

மூளிக்குடம், *s.* A pitcher broken at the mouth.

மூளிநாய், *s.* A dog with cropped ears.

மூளிமுக்காடு, *s.* A female's hood covering only the head, *distinguished from* முக்காடு.

மூளியுதடு, *s.* A hare-lip, &c. See உதடு.

மூளியோடு, *s.* A chipped tile.

மூளு—மூள், கிறேன், மூண்டேன், வேன், மூள, *v. n.* To kindle, to catch fire, செருப்புப்பற்ற. (*c.*)

எசமானுக்கு வேலக்காரன்மேற்கோபமூண்டது.....The master's wrath was kindled against his servant.

அதைமூளவை. Set it on fire.

மூளல்—மூளுதல், *v. noun.* Kindling as fire, anger, &c.

மூளை, *s.* Brains, marrow, medullary substance as a constituent part of the body. See நாத. (*c.*)

மூளைசிதறஅடிக்க, *inf.* To dash out another's brains.

மூளைவறண்டவன், *appel. n.* An eccentric man, (*lit.*) one whose brains have become dry.

மூன்று, *s.* [*adj. and s. vul.* மூணு.] Three.

மூன்றக்கினி, *s.* The three household fires, as முத்தீ.

மூன்றத்தொருபங்கு, *s.* A third part.

மூன்றவராமாற்றுச்சக்கரச்சுழி. See சுழி.

மூன்றவத்தை, *s.* Three states of the mind, as நிரியாவஸ்தை.

மூன்றுங்கட்டு, *s.* The third and last bandage to a broken limb—*a phrase implying a decisive opinion.*

மூன்றுங்கால், *s.* The first foot of the marriage பந்தல், which is set up on the third day before the wedding, a lucky day—the third, fifth or seventh being always chosen. 2. Consanguinity of the third degree. (*c.*)

மூன்றும்பாட்டன், *s.* [*com.* மும்பாட்டன்.] The grand-father's grand-father.

மூன்றும்முறைக்காய்ச்சல், *s.* Tertian fever.

மூன்றுமடிக்க, *inf.* To fold three times.

மூன்றுவது, *appel. n.* That which is third. 2. [*as an adv.*] Thirdly.

மெ

மெ. A syllabic letter formed of ம் and எ.

மெச்சு, இறேன், மெச்சினேன், வேன், மெச்ச, v. a. [*also* மெச்சு.] To admire greatly, to wonder, வியக்க. 2. To praise, to extol highly, to flatter, புகழ. 3. To esteem, மதிக்க. தன்னைமெச்சிக்கொள்ளுகிறான்.....He boasts himself.

மெச்சாதவர்கள், *appel. n.* Welcome guests, friends, சினேகர்.

மெச்சல்—மெச்சு, *v. noun.* Approbation, commendation, உவப்பு.

மெட்டு, *s.* Rise or fall in music, a musical interval, இராகமெட்டு. 2. The bridge of a fiddle, வாசிக்மட்டு. [*Tel.*] 3. Wood or jungle which surrounds a village, ஊரைச்சுற்றுங்காடு. (*Beschi.*) 4. A place where toll, or custom is paid, ஆயத்துறை.

பெரியமெட்டு, *s.* The chief place where custom is paid.

மெட்டுச்சேவகன், *s.* [*sometimes* மெட்டையன்.] The keeper of the entrance of such a place; also a toll-gatherer. (*Govt. usage.*)

•மெது—மெதுவு, *s.* [*a corrup. of* மிருது.] Softness. 2. Bluntness of an edge, &c. 3. Gentleness, mildness. (*c.*)

மெதுவாக்க, *inf.* To make soft, to soften.

மெதுவாய்ப்பேச, *inf.* To speak slowly, gently, modestly.

மெதுக்கு, *s.* [*for.*] Pomplemose, shaddock, நாரத்தை. 2. [*Tel.*] Rice, சோறு.

மெதுமெது, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To be soft or yielding as fruit; [*ex* மெது *reiterated.*]

மெதுமெதுப்பு, *v. noun.* Softness.

•மெத்து, *s.* Softness, மென்மை; [*from Sa. Mid.*] (*சது.*)

மெத்தென. Softly, gently. (*p.*)

மெத்தெனப்படுத்தினால்நிலைக்கும். A soft bed promotes sleep. (*Avv.*)

மெத்தெனவு. Mildness of disposition, temper or speech, pliancy, சாந்தகுணம்.

வெட்டெனவுமெத்தெனவைவெல்வது. Rage will not conquer meekness. (நன்னெறி.)

மெத்து, இறேன், மெத்தினேன், வேன், மெத்த, *v. n.* To be abundant, to become great, மிக.

மெத்த—மெத்தவும். Much, abundantly, greatly.

மெத்தவும்பெரிது. It is very great.

மெத்தமெத்தக்கேட்டேன்.....I asked him with much entreaty.

மிகத்திக்கொள்ள, *inf.* To be great in quantity, to exceed in proportion.

மெத்தை, *s.* Bolster, cushion, pillow, bed, mattress, அணை. 2. Upper story of a house, மேல்வீடு. (*சது.*) (*c.*) 3. [*Tel.*] A terrace, a terraced house; a house of different stories, அடுக்குமெத்தை. See அடுக்கு.

மெத்தைதைக்க, *inf.* To make a mattress or quilt.

மெத்தைப்பாய், *s.* A mat for spreading on a mattress.

மெத்தைவீடு, *s.* A terraced house. 2. Upper story, an upstair-house.

மெந்திரி—மேந்திரி, *s.* [*prov.*] The frame work, beams, &c., over a room to which a cloth ceiling may be attached; frame work of a loft, பரண்.

மெய், *s.* Truth, sincerity,—*oppos. to* பொய், சத்தியம். (*c.*) 2. The body, person, உடம்பு. 3. Surface of the body, or feeling as one of the five senses, ஐம்பொறியொன்று. 4. [*in gram.*] A consonant, மெய்யெழுத்து.

மெய்என்றலினிதுபொய்கொண்டுபொரிதுது.... Truth is quiet, lie is blustering. [*prov.*]

மெய்பொய்சாரியுங்கள். Find out its truth or falsity.

மெய்கண்டதேவர், *s.* A poet well skilled in Hindu metaphysics; also called, சுவேதவனப்பெருமாள்.

மெய்காட்டல், *v. noun.* Exhibiting strength, (*lit.*) *showing the body.* (*p.*)

மெய்கூறல்—மெய்சொல்லல், *v. noun.* Speaking the truth.

மெய்காப்பாளர், *s.* [*also* கஞ்சுகர்.] Body-guards, மெய்க்காவலர்.

மெய்க்கவசம்—மெய்யுறை, *s.* A coat of armor, a vestment.

மெய்க்கீரை, *s.* [*prov.*] Genuine sprouts in jack-trees, &c., as distinguished from பொய்கீரை. See கீரை.

மெய்க்கீர்த்திமாலை, *s.* A panegyric poem in the கட்டளை versification, describing the illustrious descent, and famous actions of a hero. See பிரபந்தம்.

மெய்க்கொள்ள, *inf.* [*com.* மெய்யென்று கொள்ள.] To believe, take to be true.

மெய்க்கோள், *s.* Earnest-money. (*R.*)

மெய்க்கோளாய்வாங்கினேன். I got money in advance.

மெய்ஞ்ஞானம்-மெய்ஞ்ஞானவிட்டை, *s.* True wisdom, the state of the most exalted ascetic.

மெய்ஞ்ஞானி, *s.* The true sage.

மெய்நலம், *s.* [*sometimes* மெய்ந்நலம்.] Strength, வலி. (*சது.*)

மெய்ந்நூல், *s.* [*com.* மின்னூல்.] Ancient writings, *commonly divine.*

மெய்நூலன், *s.* An epithet of Dronacharya, துரோணாசாரியன். (*சது.*)

மெய்புகருவி, *s.* A vestment, as மெய்க்கவசம். (*p.*)

மெய்ப்படாம், *s.* A mantle or cloak, covering the whole body, மேலங்கி; [*ex* படாம், a cloth.] (*p.*)

மெய்ப்படுத்த, *inf.* [*intrans.* மெய்ப்பட] To prove substantial.

மெய்ப்பரிசம், *s.* Eight sensations of the body; 1. ஊன்றல், from placing; 2. கட்டல், binding; 3. குத்தல், stabbing; 4. தடவல், stroking; 5. தட்டல், patting; 6. தீண்டல், touching; 7. பற்றல், seizing; 8. வெட்டல், cutting—also called, அஷ்டமெய்ப்பரிசம்.

மெய்ப்பாடு, *v. noun.* Indication of passion or sentiment, by gesture, or any other signs—as tears for sorrow, the erection of the hairs of the body from love, joy, transport. 2. Experience of truth.

மெய்ப்பை, *s.* A tight garment fitted to the body, சட்டை. (*சது.*)

மெய்ப்பொருள், *s.* Sound doctrine. 2. The truth, an epithet of God, கடவுள். 3. Knowledge, அறிவு. Compare கைப்பொருள்.

மெய்ப்பொறி, *s.* The body as the organ of touch.

மெய்மதம், *s.* True religion.

மெய்மயக்கம், *s.* [*in gram.*] Consonants occurring together in a word, as ன் and ட in கன்டம்; க, in பக்கம். See மயக்கம்.

மெய்மலம்—மெய்மாசு, *s.* Human dung, காதல். 2. As மலமூத்திரம். (*p.*)

மெய்மறதி — மெய்மறத்தல், *v. noun.* Swooning, losing one's senses by delirium, becoming unconscious. (*c.*)

நான்மெய்மறத்தபோனேன். I had quite forgotten [to bring, &c.]

மெய்மெய்யாய். Very truly, evidently, in the very act.

மெய்மை, *s.* A truth, fact. 2. Thought, intention, நினைவு.

மெய்மைகூறல், *v. noun.* Acknowledging the truth.

மெய்யர், *appel. n.* Brahmans, அந்தணர். 2. Rishis, sages, ரிஷிகள்.

மெய்யன், *appel. n.* A true man, an honest person; a trust-worthy, upright man—*oppos. to* பொய்யன். 2. (*p.*) A son, மகன்.

மெய்யுணர்தல், *v. noun.* Understanding and feeling the truth.

மெய்யுரைத்தல், *v. noun.* Explaining a text; a commentary.

மெய்யெழுத்து, *s.* A consonant, a bodyletter, *to which a vowel gives life.*

மெய்என்றிருக்கிறது. Taking for a truth.

மெய்வருக்கை, *s.* The class of consonants. See வருக்கை.

மெய்விரதன், *s.* An epithet of Yudhist'hira, உதிட்டிரன். 2. An epithet of Bishma, பீஷ்மன். (*p.*)

மெய்விவாகம், *s.* True matrimony, marriage according to law.

மெய், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be faithful, or true; to hold the truth.

அவன்மற்றவர்கள்மெய்க்கப்பேசுகிறான்.....He speaks so as to make others believe.

மெய்ப்பு, *v. noun.* Verification. 2. Praise, commendations.

மெய்ச்சு, *v.* [*com.* மெச்சு, *which see.*] To praise.

மெய்ப்பி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To prove, to substantiate, ருசுப்படுத்த.

நீஅதைமெய்ப்பிக்கக்கூடுமோ. Can you prove it?

மெய்ப்பிரம், *s.* A cloud, மேகம். (*சது.*)

மெருகு, *s.* Smoothness, glitter, lustre, தகக்கம். [*Tel.* మెరుగు.] 2. A plant with a bulbous root, used in medicine, கிருகு.

மெருகிட — மெருகுதேய்க்க — மெருகுபோட, *inf.* To polish, make to shine.

மெருகெண்ணெய், *s.* Varnish-oil for giving a lustre to cabinet-work.

மெலி, *s.* Softness, thinness. 2. [*in gram.*] A soft letter, மெல்லெழுத்து; [*ex* மெல்.]

மெலியது, *appel. n.* That which is soft, weak, thin, light. (*தித்தெறி.*)

மெலி, கிறேன், ந்தேன், மெலிவேன், ய, *v. n.* To be reduced, emaciated, weak, thin; to shrink, to become lean, gaunt, meagre; to languish; to become reduced in body, mind or circumstances; to be slender, poor, or soft; to assume the form of a soft letter.

நான்மெத்தமெலிந்தபோனேன். I became very lean.

மெலிந்தஓசை, *s.* A soft voice.

மெலிந்தகுடி, *s.* An impoverished family.

மெலிந்தோன், *appel. n.* An unfortunate man, வியன்னன். (*R.*)

மெலிவு, *v. noun.* Weakness, feebleness, thinness, lightness; lassitude.

உன்னுடம்புமெலிவாயிருக்கிறது. Your body is wasting.

மெலிவடைய, *inf.* To become reduced in body or circumstances.

மெலிவுசெய்ய, *inf.* To distress, afflict, oppress, துன்புறுத்தல். (*p.*)

மெலி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To make lean, to make soft. 2. To soften a consonant; also மெலிக்க, and மெலிப்பண்ண. (*p.*)

மெலித்தல், *v. noun.* Making soft; softening a consonant—*oppos. to* வலித்தல்—*as* தட்டை to தண்டை.

மெலு, *s.* A thin coin under the standard weight—*oppos. to* வரு. *P. Du. Bourges.*

மெலுகு, *s.* [*Tel.*] Exquisiteness, minuteness, tenderness, மிருது.

மெல், *adj.* Soft.

மெல்ல, *adv.* [*com.* மெள்ள.] Slowly, gently.

மெல்லணை, *s.* A soft pillow, or bed, மெத்தை. (*p.*)

மெல்லன், *appel. n.* The chief of a brackish soil, or of a district near the sea, செம்தனிலத்தலைவன். (*சது.*)

மெல்லி, *s.* A woman, பெண். (*p.*)

மெல்லிக்கை, *s.* Thinness, ஒல்சட்டை.

மெல்லிது—மெல்லியது, *appel. n.* [*com.* மெல்லிசு.] That which is soft.

மெல்லிதாய்நூற்றது.....Spinning fine threads.

மெல்லியகல்லான், *s.* A gentlewoman, பெருமட்டி. (*p.*)

மெல்லியர் — மெல்லியார் — மெல்லியவர், *s.* The weak, the emaciated, the delicate, மெலிந்தவர். 2. Women, பெண்கள்.

மெல்லியல், *s.* A female, பெண். [*pl.* மெல்லியலார்.] 2. A tender twig of a tree, இளங்கொம்பு. (*சது.*)

மெல்லியவாழை, *s.* The soft plantain-tree.

மெல்லியான், *s.* A woman, பெண். (*p.*)

மெல்லியாடோன்சேர். Live with thine own wife. (*Avv.*)

மெல்லினம், *s.* The class of soft, or nasal consonants, ம், ஞ், ண், ந், ம், ன்.

மெல்லினவெதுகை, *s.* One of the இன வெதுகை, in which the second letter of each line is any of the soft consonants.

மெல்லெழுத்து, *s.* A soft or liquid consonant.

மெல்லென, *inf.* To be soft, gentle; *used adverbially.*

மெல்லெனப்பாயுந் தண்ணீர்கல்லியுங்குழியப்பாயும். The water which flows gently will excavate a stone.

மென்கணம், *s.* The soft letters, as மெல்லினம். (*p.*)

மென்சொல், *s.* A soft or kind word.

மென்பால், *s.* Fertile and cultivated ground; [*ex* பால், place.]

மென்மை, *s.* Fineness, softness, thinness. See ஊது. 2. (*p.*) As மெல்லினம்.

மென்மையார், *s.* [*pl.*] Women, as மெல்லியர்.

மென்னடை, *s.* A swan, *as a bird of graceful walk,* அன்னம். 2. A gentle, slow walk, அன்னநடை.

மென்னிலை, *s.* A mode of using the hands in dancing. See காலமைவகை.

மெல் — மெல்லு, கிறேன், மெனறேன், மெல்லுவேன், மெல்ல, *v. a.* To chew softly, as rice, grapes, &c., to masticate, சவட்ட. 2. [*fig.*] To taunt, to reproach, தூஷிக்க. (*c.*)

மென்றதுப்பு. Chew and spit (it).

இரவும்பகலுமென்னைமென்றுகொண்டிருக்கிறான்.....He chides me night and day.

பாக்குமென்றடக்குதல். Keeping a cud of betel-leaf, in one cheek.

மெல்விலை, *s.* Betel-leaf, வெற்றிலை. (*p.*)

மெல்லு, கிறது, மெல்லினது, ம், மெல்ல, *v. n.* To be light, not heavy; [*ex* மெல்.] (*சன்-பொதுப்பாயிரம்.*)

மெழுகு, *s.* [*vul.* மெழுக்கு.] Bee's wax, வண்ணம். (*c.*)

மெழுகிடல் — மெழுக்கிடல், *v. noun.* Waxing, smearing with wax.

மெழுகுகட்டிவார்த்தல், *v. noun.* Pouring melted metal into such a mould.

மெழுகுகூட்டுதல், *v. noun.* Forming an image of wax to make a mould, for casting images, or statues, &c.

மெழுகுச்சாணை, *s.* A hone formed of black sand and wax.

மெழுகுச்சீலை, *s.* A cloth smeared with wax.

மெழுகுச்சேர்வை, *s.* Cerate.

மெழுகுதிரி—மெழுகுத் திரி—மெழுகுவத்தி—மெழுகுவர்த்தி, *s.* A wax-candle.

மெழுகுதோய்த்தல், *v. noun.* Dipping in wax, waxing.

மெழுகுத்துணி, *s.* A piece of cloth, smeared with wax.

மெழுகுத்தட்டு, *s.* Cake of wax, &c.

மெழுகுபதம், *s.* A thick consistency of melted wax. See பதம்.

மெழுகுபணியன், *s.* [*prov.*] Small-pox with pustules small and thick.

மெழுகுபோடுதல், *v. noun.* Waxing cabinet-work, wooden furniture, &c.

மெழுகுவத்தி, *s.* A wax-candle, a taper.

மெழுகெடுத்தல், *v. noun.* [*sometimes* மெழுகுரித்தல்.] Taking out the wax used in painting chintz, by boiling.

மெழுகெழுதுதல். Painting figures with wax in coloring chintz.

மெழுகு, கிறேன், மெழுகினேன், வேன், மெழுக, *v. a.* [*vul.* மொழுகு.] To smear, to spread, to coat over with cow-dung, &c., தளமெழுக. (*c.*)

அவன்செய்தகுற்றத்தையெல்லாம்நானேமெழுகுகிறேன்..... He cloaks [coats over] the faults of the other.

மெழுகிடல், *v. noun.* Daubing a place with cow-dung, தளமெழுகல்.

மெழுகுமண், *s.* Clay used in forming a mould over the figure of wax, in casting.

மெழுக்கு, *v. noun.* Smearing a floor with mashed earth and cow-dung; or with sandal paste.

மெழுக்குச்சாத்துதல், *v. noun.* Smearing a floor. (*p.*)

மெள்ள, *adv.* [*com. for* மெல்ல.] Softly, gently, with a slow pace.

மெள்ளப்பேசு. Speak slowly.

மெள்ளவா. Come softly.

மெள்ளநட. Walk slowly.

மெள்ளமெள்ள. Too slow.

மென்மேலும், *adv.* Moreover, more and more, over and above, as மேலுமேலும்.

மென்னி-மென்னீ, *s.* [*vul. for* மன்னீ.] The throat, மிடறு.

மே

மே. A compound letter composed of ம் and ஏ.

மே, s. Love, அன்பு. See மேவு.

•மேகம், s. A cloud, முகில். W. p. 672. MEGHA.

சத்தமேகங்களுக்கடிசெருப்புமழைபெய்தாற்போல. As if the seven clouds poured forth fire.

மேகமருவுகிறது. It rains.

மேகவியாபரிக்கிறது. Being overcast, or cloudy.

காலமேகம், s. A cloud in the rainy season.

காளமேகம், s. A dark or heavy cloud, *an emblem of fertility*, இருண்டமேகம்.

மேகம், எ. The seven different clouds, viz: 1. சம்வர்த்தம், a cloud shedding down gems, மணி; 2. ஆவர்த்தம், a cloud pouring out water, நீர்; 3. புட்கலாவர்த்தம், discharging gold, பொன்; 4. சக்காரித்தம், scattering flowers, பூ; 5. துரோணம், emitting dust, மண்; 6. காளமுகி, dropping stones, கல்; 7. நீலவருணம், belching fire, நீ.

மேகம், ஞ. The nine clouds, with their astrological indications: 1. ஆவர்த்தம், little rain. 2. சம்வர்த்தம், great wind. 3. புட்கலம், much rain. 4. துரோணம், scarcity, ruin. 5. காளம், much rain, grains all good. 6. நீலம், a scattering rain, grains dear. 7. வாருணம், much rain and wind. 8. வாயவம், much rain, wind, heat and fear; all grains good. 9. தமம், rain, wind and thunder.

மேககர்ச்சனை—மேககர்ச்சிதம், s. The rumbling of clouds, as கர்ச்சிதம்.

மேகக்கூட்டம்—மேகசாலம்—மேகசஞ்சாரம், s. An assemblage of clouds.

மேகஸ்தம்பம், s. A pillar of cloud.

மேகத்தொனி—மேகமுழக்கம், s. The noise of clouds, or thunder.

மேகநாதம், s. Thunder, முழக்கம். 2. Small greens, Amaranthus, சிறுகீரை. (*Sa. Meghanada.*)

மேகநாதன், s. An epithet of Indrajit son of Ravana, and reputed conqueror of Indra, இந்திரசித்து.

மேகபடலம், s. An accumulation of clouds. 2. See மேகம், *a disease.*

மேகபங்தி, s. A range of clouds, முகிலினை.

மேகபுஷ்பம், s. Water, நீர். [*Sa. Meghapushpa.*]

மேகப்புள், s. A lark, வானம்பாடி.

மேகமண்டலம், s. The region of clouds.

மேகமூடுதல், *v. noun.* Over-spreading of the clouds.

மேகரஞ்சி—மேகலிரஞ்சி, s. A kind of melody, ஓர்ராகம்.

மேகராகக்குறிஞ்சி, s. A melody adapted to a hilly country.

மேகவண்ணம் — மேகவர்ணம், s. The color of clouds.

மேகவண்ணக்குறிஞ்சி, s. A tree, Lawsonia, ஓர்மரம்.

மேகவண்ணன், s. An epithet of Vishnu from his cloud-like color, விஷ்ணு.

மேகவாகனன், *appel. n.* One whose vehicle is a cloud; the cloud-borne, *an epithet of Indra*, இந்திரன்.

மேகாதிபன், s. [*in calendars.*] The planet that governs the clouds for the year; [*ex* அதிபன்.]

மேகாந்தகாரம், s. Cloudy darkness.

மேகானந்தி—மேகாரம், s. A pea-fowl, மயில்; [*ex* ஆனந்தம், delight.]

மேகக்கல், s. Bezoar, as ஆட்டுக்கல். (*R.*)

•மேகம், s. A urinary disease. W. p. 674. MEHA. 2. Venereal disease, ஓர்நோய்.

மேககாங்கை—மேகாரகம்-மேகாங்தி, Gonorrhœa, venereal heat.

மேகக்காய்ச்சல், *v. noun.* Fever from the prevalence of venereal humors.

மேகரெத்தி, s. A venereal ulcer. See ரெத்தி.

மேகக்கிராணி, s. A kind of diarrhœa. See ரொணி.

மேகசூலை, s. Lues venerea. See சூலை.

மேகநீர், s. Humors from urinary diseases, virus of venereal and other eruptions.

மேகபடலம், s. A spreading venereal sore. 2. Disease of the eye. 3. See மேகம், cloud.

மேகப்புண்—மேகரணம், s. A venereal sore.

மேகப்புற்று, s. A venereal eruption.

மேகவாயு, s. Flatulency in the body, said to be caused by venereal heat.

மேகவியாதி, s. Venereal disease.

மேகவூரல், *v. noun.* Circulation of bad humors in the body; [*ex* ஊரல்.]

மேகவெட்டை, s. The whites, *fluor albus.*

•மேகலை, s. A woman's girdle, or zone, மாதர்இடைக்கட்டு. 2. The swelling sides of a mountain, மலைப்புடைப்பு. W. p. 672. MEKHALA. 3. A woman's jewelled girdle, இடையணியெனறு. 4. A garment worn by women, ஆடை. 5. A row or ridge of peaks on Mount Meru, மேருசிகரம்.

•மேகனம், s. [*in anat.*] Pubis.

மேக்கு, s. Height, உயர்ச்சி. 2. The west, மேற்கு. (சது.) 3. [*Hind.*] A wedge, wooden peg, ஆப்பு. [*Tel. usage.*]

மேக்கடித்தல், *v. noun.* Driving in a wedge or stake. 2. [*in cant.*] Injuring one's cause; deceiving.

•மேசகம், s. The eye of the peacock's tail, மயிற்றோகைக்கண். W. p. 673. MECHAKA.

மேசை—மேஜை, s. [*Pers. Mej.*] A table, ஓர்பீடம். (*c.*)

மேசைத்துப்பட்டி, s. A table-cloth.

மேஸ்திரி, s. [*for.*] A head workman, foreman.

•மேடம் — மேடகம் — மேஷம், s. A ram, ஆடு. [*also* மேடகம்.] 2. Aries of the Zodiac, ஓர்இராசி. W. p. 674. MESHA.

மேடவீதி, s. [*in astron.*] A tri-section of the Zodiac. See சரியவீதி.

மேடாயனம் — மேடவிடவம் — மேஷாயனம், s. Vernal equinoctial point.

மேடாயனமண்டலம், s. Equinoctial colure.

மேடு, s. [*gen.* மேட்டின். *also* மோடு.] Height, உயரம். 2. A little hill, a hillock, a rising ground, சிறுதிட்டை. 3. An affix to the name of a town, ஊர். 4. Belly, வயிறு. (சது.)

காடுமேடுமுத்தடிக்கிறான். He is taking (me) amidst hills and jungles. 2. He diverts attention from the point.

மேடுபள்ளமானவழி. An uneven road.

மேட்டாங்காடு, s. A rising ground adapted to புஞ்சை cultivation.

மேட்டுப்பாய்ச்சல், *v. noun.* The watering of high ground.

மேடிகம், s. Wall, சுவர். (சது.)

மேடை, s. An artificial mound, செய்குன்று. 2. A square place in the open air artificially raised from the ground, வேதிகை. (*c.*) 3. A house of two or more stories, உப்பரிகை.

மதிலுண்மேடை, s. A casement in the walls of a fort.

மேட்டி, s. A head-chief, தலைவன்; [*ex* மேடு.] 2. [*Colloq.*] Assistant servant; [*prob. from Eng. mate.*]

மேட்டிமை, s. [*Tel.* மீடிமை.] Loftiness, haughtiness; excellence, மேன்மை. (*c.*)

மேட்டிமையானவார்த்தைகள். Swelling words.

மேட்டிமைக்காரன், s. A proud man.

•மேதகம், s. Greatness, excellence, மேன்மை. 2. Valuation, மதிப்பு. (சது.) 3. A precious stone, as கோமேதகம்.

மேதகு, *adj.* Great, excellent, மேன்மையான.

மேதகையோர், s. [*pl.*] Eminent persons, உயர்ந்தோர். (*p.*)

•மேதம், s. A sacrifice, யாகம்—as அசுவமேதம். W. p. 674. MED'HA. 2. Murder, கொலை; [*from Sa. Metha*, to hurt.]

மேதரவர், s. [*Tel. com.* மேதாரர்.] A class of people who cut and sell bambûs, and make bambû baskets, வேக்காரர்.

•மேதாரம், s. Mountain, மலை. (சது.)

•மேதாவி. See மேதை.

•மேதி, s. A buffalo, எருமை. (சது.)

மேதிச்சென்னியிறைத்தோள், *appel. n.* Durga. See மகிடாசுரன். (சது.)

மேதியன், s. Yama, the buffalo-rider, from his vehicle. See இயமன்.

•மேதினி, *s.* The earth, as made *(according to the legend)* of the *adeps* of two Asuras slain by Brahma, பூமி. W. p. 673. MEDINI.

•மேதை, *s.* Understanding, knowledge, அறிவு. W. p. 674. MED'HA. 2. Flesh, இறைச்சி. 3. Sap of the palm-tree; mead; any intoxicating beverage, கள். 4. The skin, தோல். 5. A nerve, fibre, நரம்பு. 6. Fatness, மேனம். 7. The planet Mercury, புதன். 8. Excellency, மேன்மை. 9. *[in anat.]* Membrane; *[ex Sa. Medas.]*

மேதையர், *s. [pl.]* Learned men, poets, புலவர்.

மேதாவி, *s. [pl.* மேதாவியர்.] A man of knowledge, புத்தியுள்ளவன். (சது.)

•மேத்தியம், *s. [neg.* அமேத்தியம்.] Purification, purity, cleanness, சுத்தம். W. p. 674. MED'HYA.

•மேநகை, *s.* The proper name of a courtezan of Swerga, சுர்வேதாசி. 2. Daughter of Mount Meru, and wife of Hymalaya, as மனோமை. W. p. 674. MENAKA.

மேநகைபுதல்வி, *s.* Parvati the wife of Siva, பார்வதி. (சது.) See பருவதவர்த்தனி.

மேந்தலை, *s. [for* மேன்றலை.] Wind-ward side of a vessel. 2. Eminence, excellency, மேன்மை.

மேந்திரி. See மெர்திரி.

மேம்படு, கிறேன், மேம்பட்டேன், வேன், மேம்பட, *v. n.* To rise high, be elevated in rank, to increase in learning, or any science; to spread—as fame, யர; *[ex* மேல்.]

மேம்பாடு, *v. noun. [also* மேன்பாடு.] Nobleness, greatness, grandeur.

மேய, *[poet. form of* மேவ.] Suitable.

மேயல்விருக்கை. An appropriate seat, a seat suited to one's rank. (சாரென்.)

மேய், கிறது, ந்தது, மேயும், மேய, *v. a.* To graze; to feed, as beasts, fowls or birds—eating grass, grain or seed; to browse, gnaw, or prey on—as lice, white ants, or worms under the skin, உண்ண. *(c.)*

புழுமேய்கிறது. The worm eats.

கறையான்மேய்கிறது. White ants destroy.

வித்தவண்டிமாட்டைமேய்ததுபோலும். This cart will eat [destroy] the pair of bullocks, *it is too heavy.*

மேய்ப்போகிறமாட்டுக்குச் கொம்பிலே புல்கட்டிவிடுவாரோ. Do they tie grass on the horns of a grazing ox? *[prov.]*

மேய்சேல், *s.* A shepherd's crook, or staff, இடையன்கோல். *(p.)*

மேய்ச்தல், *v. noun.* Pasturage, feeding, grazing.

மாடுமேய்ச்லுக்குப்போகிறில்லை. The cow does not go to graze.

மேய்ச்சற்கறையான், *s.* A large white ant. See கறையான்.

மேய்ச்சற்றலம், *s.* Grazing field.

மேய், கிறேன், ந்தேன், வேன், மேய, *v. a. [com. for* வேய்.] To thatch, to cover a house, or construct an awning with leaves, &c., மூட.

அந்தவீடுமேய்ந்தாயிற்று. Is the thatching of the house done?

பொன்னினுன்மேய்தல். Gilding a roof.

மேய், ஞ்கிறேன், த்தேன், ப்பேன், மேய்க்க, *v. a.* To feed cattle, fowls, &c., graze, மேயச்செய்ய. 2. To give physic to horses, &c., as மசாலிமேய்க்க. *(c.)*

மேய்க்கி, *appel. n. [com.* மாடுமேய்க்கி.] A neat-herd. *(Beschi.)*

மேய்ப்பர், *s. [pl.]* Herdsmen, shepherds, graziers, இடையர். 2. *[Chris. usage.]* Pastors.

மேய்ப்பு, *v. noun.* Pasturage. 2. See தேய்ப்பு.

•மேரு, *s.* A fabulous mountain said to be situated in the centre of the earth called also மாமேரு, and பொன்மலை. 2. Mount, mountain, a hill in general, மலை. (சது.) 3. The top-seat of an idol in a car, தேரின்மேலாசனம். 4. *[in geogr.]* Axis.—*Note.* Mount Meru is supposed by the Hindus to be in the centre of the *seven* Dwipas, or circular continents, and is compared to the seed-vessel of a lotus, the leaves of which are the different Dwipas. Its height is 84,000 *yojanas* or 1,092,000 miles, according to the common reckoning, of which 16,000 *yojanas* are below the surface of the earth. It has four faces—one towards each point of the compass—that looking to the east is white; to the south, yellow; to the west, black; and to the north, red. The sacred Ganges falls from heaven on its summit, and flows in four streams—like those from the garden of Eden;—the *Ganges* proper going south, the *Bhadrasona*, north into Tartary, the *Sita*, east and the *Oxus*, west. The regents of the cardinal points occupy, severally, each face. Stripped of fable this mount is probably either the Hymalaya, including the highlands of Tartary to the north; or, as understood by some brahmans, the north pole. The brahmans speak of *Su-Meru* and *Ku-Meru*, and these are said to be the poles or the Zenith and Nadir of the residence of the gods.

மேருவைச்சார்ந்த காகமும்பொன்னிறம். Even a crow which resorts to mount Meru [will become] gold-colored. *[prov.]*

மேருமணி, *s.* The principal or uppermost bead in a rosary.

மேருவில்லி, *s.* An epithet of Siva from his using the mountain மேரு as a bow, வென்; *[ex* வில்.]

மேரை, *s. [Tel.* ళీర్.] Manner, way of doing, வகை. 2. Gravity, sobriety, modesty, மரியாதை. 3. A quantity of corn given at the threshing floor to the washerman, and other servants, குடிமக்கட்குக்கனத்திற்றருத்தானியம்.

சாஸ்திரிரேரையாப்பேசுகிறன். He speaks like a learned man.

மேராதப்பாதவன், *appel. n.* A temperate man.

மேல், *s.* The sky, the visible heavens, வானம். 2. The west, மேற்கு. 3. Width, breadth, அகலம். 4. Height, surface, மிகை. 5. *[a particle of declension.]* The seventh case or ablative of place, ஏழாவது. 6. *[prep.]* On, upon, above, மீத. 7. *adv.* More, more than, அதிக. 8. Before, previous, former, முன். 9. Hereafter—as a future birth, இனி.

என்தலைமேல். Upon my head.

வீட்டின்மேல். Upon the house.

நான்சொன்னதற்குமேலேசெய்தாய். You have done more than I said.

அக்கேபோனதின்மேலெக்கெழுது. Write me, after you have arrived there.

அதற்குமேல்நான்என்னசெய்வேன்.....What shall I do besides, or more?

பத்தணைக்குமேல.....Come after ten o'clock.

இனிமேல்என்னசெய்வாய். What will you do in future?

மேல்கீழ்இல்லை. Is there no up and down; no high and low in rank?

மேலுக்குசெகமில்லை. I am not in health of body, *(lit.)* to the outside.

என்மேலொன்றுமில்லை. There is nothing against me.

அவனேமேலாயிருக்கிறன். He stands high.

பகைவர்மேற்சென்றன். He went against the enemy.

மேலகம், *s.* A high abode; beatification, மோட்சம்; *[ex* அகம், place.] *(p.)*

மேலங்கி, *s.* A scarf or mantle.

மேலதுகீழதாய், *[also* கீழதுமேலதாய்.] Upside down, subverted.

எல்லாமேலதுகீழதாய்க் கீழதுமேலதாய்ப்போயிற்று. It is all over-turned.

மேலவர், *s. [sing.* மேலவன்.] Superiors, பெரியோர். 2. The celestials, வானோர். *(p.)*

மேலவரிறைவன — மேலவர்க்கிறைவன், *s.* An epithet of Subramanya, leader of the celestial armies, முருகன். (சது.) 2. An epithet of Indra, இந்திரன்.

மேலழுக்கு, *s.* The dirt or filth on the body.

மேலாகியஇன்பம், *s.* Supreme enjoyment, the happiness of heaven, பேரின்பம்.

மேலாமினுக்கி, *appel. n.* A woman who trims herself up. *(Colloq.)*

மேலாலம், *s.* Rain, மழை. (சது.)

மேலாலவத்தை, *s.* An ascending அவத்தை, when the soul of one whose births are ended departs upward at death. Compare தோலவத்தை.

மேலாலிலேதெரிவப்பித்தறிது. Informing a higher authority. *(Govt. usage.)*

மேலானகாரியம், *s.* High things in general. 2. Sentimental subjects, ஞானவிஷயம்.

மேலானவர், *appel. n.* A superior.

எல்லாற்றிலும்மேலானவர். The Most High.

மேலிட, *inf.* To increase in quantity. 2. To grow, as hatred or malice. 3. To overwhelm, as water.

மேலீடு, *v. noun.* Superiority in office, superintendence. 2. *[vul.* மேலிடு.] A female's ornament for the upper part of the ear. 3. Prevalence, predominance.

மேலுதடு, *s.* The upper lip.

மேலும், *adv.* Moreover, further, besides.

மேலுமேலும். *[also* மென்மேலும்—மேன்மேலும்.] More and more.

மேலுலகம், *s.* Upper worlds. See உலகம்.

மேலுறுதி—மேலத்தாட்சி, *s.* Additional evidence, confirmation, as மேற்சாட்சி.

மேலெழவாருதல், *v. noun.* Taking off from the top of the heap.

மேலெழுச்சி. Superficialness. 2. *[met.]* Pride, haughtiness, as எழுச்சி.

மேலெழுச்சியாயிராதே. Be not careless.

மேலெழுந்தவாரி, *s.* Superficial quality.

மேலே, *adv.* Above, over.

மேலேபார். Look up,

மேலே—மேலேக்கு. Afterwards, after some time. 2. The next year. மற்றவருஷம். மேலேக்குவாழ்க்கைப்படுகிறேன்கழுத்தேசுகமாபிரு என்றதுபோல. As if he said, "I will be married next year, be at ease, oh! neck." *Prov.*

மேலேவருஷம். Next year.

மேலோர்—மேலையோர், *s.* [*pl.*] The exalted, as மேலோர். (*p.*)

மேலொப்பனை, *s.* Additional proof, or evidence.

மேலொற்றி, *s.* A second mortgage; [*ex* ஒற்றி.]

மேலோங்கிவினங்குதல், *v. noun.* Being elevated and known.

மேலோர், *s.* [*pl.*] The great, the excellent, the exalted, உயர்ந்தோர். 2. Ancestors, ancients. 3. (*சத.*) Celestials, வானோர். 4. Poets, புலவர். 5. Sages, அறிஞர்.

மேல்காற்று, *s.* The west wind.

மேல்குளிக்க, *inf.* To bathe one's body.

மேல்கை, *s.* Further, beyond, on the farther side. 2. Higher rank, standing, degree or pedigree. 3. The west, மேற்கு. 4. High lands, மேடு.

மேல்சாதி, *s.* High caste.

மேல்சீமை — மேற்சீமை — மேனாடு, *s.* The west-country.

மேல்நோக்க, *inf.* [*poet.* மேனோக்க.] To ascend upward, to tend upward.

மேல்நோக்கிருமண்ணிடுவோர். A set of Vaishnuvas who turn their tridental religious mark upwards.

மருந்துமேல்நோக்காதிருந்தால்நல்லது. It will be better if the medicine be not vomited.

மேல்நோக்கம்—மேல்நோக்கு, *v. noun.* A forward aspect or tendency, spiritual inclination or pursuit.

மேல்பால், *s.* The west, மேற்கு; [*ex* பால், side.] (*p.*)

மேல்மட்டம், *s.* The upper level of a frame work.

மேல்மாடி *s.* The upstair-room of a palace.

மேல்முத்திரி, *s.* See இம்மி.

மேல்வட்டம், *s.* Superiority, excellency.

மேல்வட்டமாயிருக்க, *inf.* To be superior; to prevail.

மேல்வாய், *s.* The upper part of the inside of the mouth, அண்ணம். 2. The palate, or roof of the mouth.

மேல்வாயிலக்கம், *s.* Numerator of a fraction—*oppos. to* கீழ்வாயிலக்கம்.

மேல்வாய்க்கணக்கு, *s.* Integers, whole numbers.

மேல்வாரம், *s.* The Government's, or a landlord's share of produce—*oppos. to* குடிவாரம்.

மேல்விசாரணை, *s.* Superintendence, oversight.

மேல்விசாரணைக்காரர். A superintendant, one having authority.

மேல்விட்டம், *s.* The beam which supports the roof of a house.

மேல்வீதேகம், *s.* One of the nine continents of the Hindus. See நவகண்டம்.

மேல்விலாசம் — மேல்வினாசம், *s.* A superscription, the direction of a letter.

மேல்வீடு, *s.* An upstair-house.

மேல்வெள்ளம், *s.* Fresh rushing current on the swelling of a river.

மேற்கடல், *s.* [*com.* மேல்கடல்.] The western sea.

மேற்கட்டி, *s.* [*Hind.* அகமானகிரி.] The top of a bed, a tester, a canopy, an awning. 2. A cloth spread beneath the roof of a room to prevent the dust from falling. 3. A tarpauling, படங்கு.

மேற்கட்டு, *s.* A loft, an upper story. 2. An upper garment.

மேற்கதி, *s.* Upward tendency as in the growth of vegetables, as in flame, or as of the spiritual mind. 2. Supreme bliss, மோட்சம். (*p.*)

மேற்கதுவாய், *s.* [*in prosody.*] Rhyming in every foot but the second. See தொடை, I. 6.

மேற்கதுவாய்மோனை, *s.* See மோனை.

மேற்காவல்—மேற்காறுபாறு, *s.* Superintendence.

மேற்குலத்தோர் — மேற்குலர், *s.* [*pl. com.* மேல்குலத்தார்.] High caste-people, those of a superior class. 2. Brahmans, அந்தணர்.

மேற்கூரை, *s.* The thatched roof of a house.

மேற்கொதி, *s.* Feverishness of body.

மேற்கொள்ள, *inf.* To rise, to mount. 2. To overcome, to gain eminence, to conquer, to exceed, to rise above. 3. To embrace, to admit.

அவனைநான்மேற்கொண்டிலிட்டேன். I have surpassed him.

குதிரைமேற்கொண்டான். He mounted a horse.

மேற்கோள், *v. noun.* Quotation, ஆதாரி பவசனம். 2. The planet Saturn, சனி. 3. Excellency, மேன்மை. (*சது.*) 4. A covering, போர்வை. (*p.*)

மேற்சட்டம், *s.* The upper part of a door-post.

மேற்சாட்சி, *s.* Additional evidence, confirmation of previous evidence.

மேற்சிட்டு, *s.* A bill annexed to a writing to authenticate it.

மேற்சீமை, *s.* West country.

மேற்சுவாசம் — மேன்மூச்சு, *s.* Hard breathing, as of one dying.

மேற்செம்பாலை, *s.* [*in music.*] A tune pitched on the seventh note.

மேற்செல்லல், *v. noun.* Going beyond, going further; exceeding, surpassing. 2. Going against or attacking an enemy.

பகைவர்மேற்சென்றான். He went against the enemies. (*p.*)

மேற்பக்கம், *s.* The upper side. 2. [*com.* மேல்பக்கம்.] The west side.

மேற்பட, *inf.* To excel, exceed. 2. To overcome. 3. To predominate, preponderate; to be superior. 4. To fall upon or treat harshly.

மேற்படி. Ditto, before-mentioned, aforesaid. (*abriged.*)

மேற்படிகாரியத்தைநோக்கவேணும். I must think over the matter.

மேற்படியாளைக்கூப்பிடு. Call that man.

மேற்படியூர். The above-mentioned town.

மேற்பரப்பு, *s.* Surface.

மேற்பலகை, *s.* The lintel.

மேற்பாடம், *s.* [*also* மாதிரிகை.] The original of a writing

மேற்பாரம், *s.* A weight for pressure. 2. [*in cunt.*] Stuffing the bowels with food.

மேற்பார்வை, *s.* Long-sightedness. 2. Oversight, supervision. 3. A high look, pride.

மேற்புத்தி, *s.* Counsel, advice. (*c.*)

மேற்புறணி—மேற்பட்டை, *s.* The outside bark of a tree.

மேற்புறம்—மேற்றலை, *s.* Outside, surface. 2. [*in seaman's language.*] The wind-ward side of a vessel.

மேற்பூச்சு, *v. noun.* Outside-plating.

மேற்போட்டுக்கொள்ள, *inf.* To undertake. 2. [*with the person. dat.*] To be surety for a person.

மேற்போட்டுக்கொண்டுபேசினான். He spoke in one's defence.

மேற்றரம், *s.* The first or best sort.

மேற்றளம், *s.* An upper floor. (*c.*) 2. Body guard. 3. The calix of a flower.

மேற்றிசை, *s.* The west quarter, as மேற்கு; [*ex* திசை.]

மேற்றிசைப்பாலன், *s.* The regent of the west, வருணன். See திக்குப்பாலர்.

மேற்றிராணி, *s.* Superior power, அதிகாரம். 2. [*R. C. usage.*] A prelate, கண்காணி; [*ex* திராணி.]

மேற்றிராணிப்பட்டம், *s.* The prelatical office.

மேன்படை—மேன்பலம், *s.* The reserve body of an army. (*p.*)

மேன்பலமேவிவந்தார்கள். They came with an auxiliary force.

மேன்பாடு, *s.* Excellency, nobleness, as மேம்பாடு.

மேன்மக்கள், *s.* Great men. (*p.*)

மேன்மக்கள்சொற்கேள். Hear the advice of great men.

மேன்மிச்சம்—மேல்மிச்சம், *s.* Superfluity, more than enough.

மேன்மூடி—மேல்மூடி, *s.* A cover, a lid.

மேன்மேல்—மேன்மேலும். Higher and higher, more and more, as மேலுமேலும்.

மேன்மை, *s.* Greatness, grandeur, sublimity, eminence, excellence, magnanimity, dignity, மகத்துவம். 2. Respect, nobleness, கண்ணியம்.

மேன்மைபாராட்டல், *v. noun.* Glorying, vaunting.

மேன்மைபொருந்தியவர்கள், *s.* The honorable.

மேவு, றேன், மேவினேன், வேன், மேவ, *v. a.* To fill up, நிரவ. 2. To desire, விரும்ப. 3. To love, நேசிக்க. 4. To make the ground even, level, சமமாக்க. 5. To eat, உண்ண. 6. To join, combine, approach, சேர.

மேவலர்—மேவார், *appel. n.* Foes, enemies, பகைவர். (*சது.*)

மேவினர், *appel. n.* Friends, allies, நேசர். 2. Relations, உறவோர். (*p.*)

மேவு, *v. noun.* Desire, ஆசை. (*சது.*)

மேழகம், *s.* A coat of armor, கவசம். 2. A ram, செம்மறிக்கடா. 3. A ram bred for fighting, தருவாட்டேறு; [*ex* மேஷம்.]

மேழி, *s.* The plough-tail, கலப்பை வின்கைப்பிடி.. 2. A plough, கலப்பை. (*c.*)

மேழிச்செல்வம், *s.* The wealth of the plough. See கோழை.

மேழியர், *s.* [*pl.*] Farmers, வேளாளர். 2. People who live in a cultivated country, மருதநிலமாக்கள். (*p.*)

*மேளம், *s.* A collection of musical instruments, பலவாச்சியக்கூட்டம்; [*ex Sa. Mela.*] 2. A sort of drum, பறை.

மேளங்கொட்டுதல்—மேளஞ்சேலித்தல்—மேளமடித்தல், *v. noun.* Beating the drum.

மேளமுழக்கம், *s.* Sound of a drum.

மேளவாத்தியம்பண்ண, *inf.* To play on instruments.

*மேளனம், *s.* A crowd, an assembly, சேர்க்கை. W. p. 674. MELANA.

மேற்கு, *s.* The west; [*ex* மேல்.]

மேற்கடைப்போ. Go still west-ward.

மேனி, *s.* Bodily form or shape; body, உருவம். 2. Color, நிறம். 3. Beauty, வடிவு. (*c.*) 4. A caste, ஜாதி.

மேனிருலெச்தபோயிற்று. The beauty is gone.

மேனிபழுதாயிருக்கிறது. Her beauty is not lessened.

மேனிமுதிராயிருக்கிறான். He is unadorned (*lit.*) as he was born. 2. He is uncontaminated.

கறந்தமேனியாய்க்கொண்டுவா. Bring as milked.

அவர்வைசியத்திருமேனி. He is of the Vaisya caste.

மேனிகுலைய, *inf.* To be deformed, &c. See குலை, *v. n.*

குப்பைமேனி, *s.* A plant. See குப்பை.

வெட்டுமேனி, *s.* New coined money.

*மேனை, *s.* Wife of the Hymalaya mountain, as மேகை. W. p. 674. MENA.

மேன்கஸ்து, *s.* [*Hind.*] An overseer.

மேன்மை, *s.* See under மேல்.

மை

ம்ம. A syllabic letter, composed of ம் and ஐ.

மை, *s.* Black or magical paint for the eyes, அஞ்சனம். 2. Black, blackness; ink, சதிப்பு. 3 Fault, குற்றம். 4. A kind of sheep, செம்மறியாடு. 5. The first sign of the Zodiac, மேடராசி. (*sd.*) 6. A barren woman, மலடி. 7. A barren buffalo, மலட்டெருமை. 8. A cloud, மேகம். 9. An affix expressing an abstract quality, or condition, as இருமை, doubleness; வன்மை, charitableness; பொறுமை, patience; செய்யாமை, inaction.

இருக்கின்றமையால். Because it is.

மைகூட்ட, *inf.* To make ink or paint. See கூட்டு, *v.*

மைக்காடி, *s.* [*also* மைக்காட்டுமண்.] Ashes and dust from a goldsmith's furnace; from which by washing they obtain the precious metals, அக்கசாலைமண்.

மைக்காப்பு, *v. noun.* Coloring the writing of an ola book, மைபோதெல்.

ஏட்டிற்குமைக்காப்பிட்டான். He blackened the letters of an ola book.

மைக்கூடு, *s.* An inkstand. (*c.*)

மைபூசுதல்-மையிடுதல், *v. noun.* Coloring with ink, or pigment, especially the eye-brows.

மைமா, *s.* A hog, as being usually black, கரும்பன்றி; [*ex* மா.] (*sd.*)

மைமுகன், *s.* A large and black kind of ape, முசு. (*sd.*)

மைமை, *s.* A barren-woman, மலடி. 2. A barren buffalo, மலட்டெருமை. (*sd.*)

மையுண்கண்ணி, *s.* A woman with painted eyes. See உண், *v.* (*p.*)

மையூட்ட, *inf.* To paint the eye-lids as women, or tattoo the skin.

மையிடியர்வீட்டையகல். Avoid the house of those who blacken the lower eye-lids.

*மை, *s.* Water, நீர். W. p. 630. MA.

மை, நிறது, ந்தது, ம்பு, மை, *v. n.* To be slightly pounded, to be separated from the husk by beating, மடி.

மைசூர், *s.* A town, Mysore; the country or table-land so called, தேசம்.

மைச்சாள்-மைச்சுனி, *s.* [*as* மச்சாள், மச்சனி.] Female cousin. 2. A sister-in-law.

மைச்சான் — மைச்சுனன், *s.* A brother-in-law, cousin, &c., as மச்சான், மச்சுனன். (*c.*)

மைதானம், *s.* [*Hind.*] An open field or plain, சமபூமி.

மைதானவெளி, *s.* A barren and extensive plain.

*மைதிலி, *s.* Sîta, the wife of Rama, சீதை; [*ex* மிதிலை, the place of her birth.] W. p. 675. MAIT'HILA.

*மைதுனம், *s.* Copulation, union, புணர்ச்சி; [*ex* மிதுனம், a couple.] [*Sa. Mait'huna.*]

மைதுனம்பண்ணுதல், *v. noun.* Cohabiting.

*மைத்திரம்—மைத்திரியம், *s.* Love, friendship, as மித்திரம்.

*மைத்திராவருணம், *s.* A Upanishad. See உபநிடதம்.

மைத்துனன், *s.* [*fem.* மைத்துனி.] A sister's husband, &c. See மச்சனன். (*sd.*)

*மைநாகம்—மைநாகன், *s.* A rock in the sea between the southern point of the Peninsula and Ceylon, considered in mythology to be the son of Hymalaya, by மேகை. The personal termination ன் is therefore given in *sd.* W. p. 675. MAINAKA.

மைந்தன், *s.* [*pl.* மைந்தர்.] A son, குமாரன். (*sd.*) 2. A man, மனிதன். Compare மாந்தன்.

மைந்து, *s.* Confusion of mind, மயக்கம். 2. Strength, வலி. (*sd.*)

மைமல், *s.* [*prov.*] Evening twilight, மாலைநேரம்.

மைமை, *s.* A barren woman, &c. See மை.

மையம், *s.* [*also written* மய்யம்.] The centre, the middle, நடு. (*c.*)

மையமாயிருத்தல், *v. noun.* Being ambiguous, உபயார்த்தப்படுதல். (*R.*)

மையவாடி, *s.* A place hedged with thorns; a cemetery. (*Beschi.*)

மையல், *s.* Confusion of mind, மயக்கம். Lust, libidinous desire—as மல், மோகம். 3. A plant, Datura, ஊமத்தம்.

மையலுஞ்சந்தை, *s.* The second-day of a fair, or market. (*Beschi.*) 2. The daily morning fair at Trichinopoly.

மையா, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To be confused in mind, மயக்க. (*p.*)

மலர்காணின்மையாதிகெஞ் சேயிவள்கண்டீரி காணும்பொழுகுன்ற. Oh! my soul, thou art bewildered at the sight of the lotus, &c., mistaking it for her eyes.

*மைரேயம், *s.* A fermented liquor from the flower of the Lythrum fruticosum, இலேயம். W. p. 675. MAIRAYA.

மைனை, *s.* The Maina bird, as மயினை.

மொ

மொ. A syllabic letter compounded of ம் and ஒ.

மொகமொகெனல், *v. noun.* [*also* மூக முகெனல்.] A word imitative of the noise of boiling water, or its gurgling from a narrow necked bottle, சாடிகொலிக்குறிப்பு.

மொகர், *s.* [*Pers.*] A seal, முத்திரை. 2. See மோர.

மொகவை, *s.* [*for* முகவை.] A kind of ladle, அகப்பை.

மொக்கணி, *s.* A gram-bag tied to a horse's mouth, தோப்பை. 2. [*prov.*] A kind of bridle for asses and oxen.

மொக்களி, கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. a.* To detain, to stop on a journey, பயணத்திற்றடுக்க. (*R.*)

மொக்கா, *s.* Mocha, a town in Arabia.

மொக்கு, *s.* (*Tel.*) Flower-buds, பூமொட்டு. 2. Large knots, warts excrescences, &c., on trees, மரக்கணு. 3. The bowl of a candlestick, குத்துவிளக்கின்மொக்கு; [*a corrupt. of* மொக்குள்.] 4. Forming ornamental flowers by marking with white powder

மொக்கன்—மொக்கன், *s.* A strong, or an athletic man, திடத்தனுள்.

மொக்கு, கிறேன், மொக்கினேன், வேன், மொக்க, *v. t.* To eat voraciously, to gluttonize.

மொக்கித்தின்ன, *inf.* To devour greedily.

மொக்குளி, க்கிறது, த்தது, க்கும், க்க, *v. n.* To bubble up, to gurgle, கும்மிவிட்டொலிக்க.

மொக்குள், *s.* A bubble, a water-bladder, நீர்க்குமிழ். 2. The navel, கொப்பூள். 3. The bud of a flower, the calix, மலரும்பருவத்தரும்பு. (சது.)

மொக்கை, *s.* [*Tel.* మొక్క.] Ignominy, shame, disgrace, வெட்கம். 2. Bulkiness, பருமை. 3. [*loc.*] A notch in a knife. 4. Bluntness of an iron style, கூரின்மை.

மொக்கையானஎழுத்தாணி, A blunt style.

மொக்கைகுலைய, *inf.* To be disgraced, to suffer reproach.

மொக்கைபண்ண, *inf.* To injure one, அவமானப்படுத்த. 2. To use a knife injuriously—notching its edge, or breaking the point, ஆயுதக்கினமழுக்க.

மொக்கைபோக, *inf.* To be disgraced or deceived. 2. To be notched as a knife, sword, &c.

மொக்கைச்சோளம், *s.* A kind of Maize. See சோளம்.

மொங்கான், *s.* A ramming block for roads.

மொசுமொசுக்க, *inf.* To crawl, to itch, to feel a sensation like the crawling of insects, கினுகின்ன.

மொசுமொசென்றெரிக்கிறது.....The itch spreads. [*crawls.*]

மொசுமொசுக்கை, *s.* A plant. See முசுமுசுக்கை.

மொசுமொசெனல், *v. noun.* A sound produced by a throng, or swarm of ants, bees, &c.

மாமொசுமொசென்றருடிக்கிறது.....The ox drinks with a gurgling sound.

மொச்சு—மொச்சுநாற்றம், *s.* [*Tel.* ముచ్చు. *sometimes* மொசை.] A strong smell from sheep, ஆட்டுவாசனை.

மொச்சடித்தல், *v. noun.* The giving of a strong scent, by sheep.

மொச்சை, *s.* A leguminous creeper, Black-seeded Dolichos, Lablab vulgaris, cultivated in புஞ்சை lands, நஞ்செய்.

கடலைமொச்சை, *s.* A kind of மொச்சை.

காட்டுமொச்சை, *s.* A variety not cultivated.

பாம்புமொச்சை, *s.* A plant. See பாம்பு.

மொச்சைக்கொட்டை — மொச்சைப்பயறு, *s.* Its pea or vetch.

மொஞ்சி, *s.* The breast, முலை, *in child's talk.*

மொஞ்சிகொற்றம், *s.* The scent of a woman's milk.

மொடமொடெனல்—மொடுமொடெனல்—மொடுமொடெனல்—மொடமொடித்தல், *v. noun.* [*also* முடமுடெனல்.] The rustling of dried skins, starched cloth, &c., *an imitative sound,* சருகெலிக்குறிப்பு. (சது.)

மொடு, *s.* [*prov.*] Greatness, bulkiness; cheapness; plentifulness, பருமை, சுலம்.

மொடுக்கு, *s.* [*indecl.*] A peculiar sound.

மொடுக்குமொடுக்கென்றருடிக்கிறது. Drinking with a gurgling noise in the throat.

மொட்டு, *s.* A tender flower-bud, இளம்பூரும்பு. (சது.) 2. Glans Penis.

தேர்மொட்டு, *s.* The rounded top of an idol-car.

மொட்டம்பு, *s.* A blunt-pointed arrow, as உதணம். [*ex* அம்பு.] (சது.)

மொட்டை, *s.* A bald head, shaved head, முண்டிதம். (c.) 2. Bluntness of an instrument, மழுக்கல். 3. An unmarried young man. (*in contempt.*)

மொட்டைக்கறுப்பர், *s.* The servants of Yama, எமதூதர். (*p.*)

மொட்டைக்குல்லா, *s.* A flat cap.

மொட்டைத்தலை—மொட்டந்தலை, *s.* A bald head.

மொட்டத்தலையிற்பேன்போலேவெளியாயிருக்கின்றது. It is as evident as a louse on a bald pate.

மொட்டத்தலையிற்பட்டங்கட்டியாளவந்தாளே..... Has that bald [incompetent] head come to govern us?

மொட்டைச்சி, *s.* [*masc.* மொட்டையன், *pl.* மொட்டையர்.] Bald female.

நாலுமொட்டையர்மாத்திரம்மிருக்கள். There are only four bald [senseless] pates.

மொட்டைதட்ட, *inf.* To strip a tree of fruit, &c.

எல்லாம்மொட்டைதட்டிக்கொண்டுபோய்விட்டார். He has taken away every thing.

மொட்டைப்பார்ப்பாத்தி, *s.* A brahman widow.—*Note.* A brahamani who has lost her husband must shave her head; or her hair, adding to her beauty, will entice men, and so be a cord to bind her husband in hell.

மொட்டைப்புத்தி, *s.* Stupidity, bluntness of intellect.

மொட்டைமாடு, *s.* [*also* மோழை.] A cow, or any of the genus bos without horns.

மொட்டையடிக்க, *inf.* To shave the head entirely, as the widows of brahmans, and of the சோழிய caste. 2. To shave the head of a criminal, as a punishment.

மொட்டையாய்ப்போக, *inf.* To become blunt.

மொட்டையாய்வெட்ட, *inf.* To lop a tree bare.

மொட்டைவெழுத்தாணி. A blunt style.

மொட்டைவசனம், *s.* An incomplete sentence; *(lit.)* a bald sentence.

மொண்டணி-மொந்தணி, *s.* [*prov.*] Protuberance or knot on a tree, மரக்கணு.

மொண்டன்-மொண்டாவன்-மொண்டி, *s.* [*prov.*] A species of சமை grain.

மொண்டி, *s.* [*Tel. for* కొండి.] A lame person.

மொண்டு, *s.* Refractoriness, unruliness, மூண்டு. (*R.*)

மொதுமொதெனல், *v. noun.* A noise produced by swallowing or sucking up some thick liquid, ஒலிக்குறிப்பு.

மொத்தம், *s.* The whole, universality, பொது. (சது.) 2. Aggregate, total, கூட்டத்தொகை. 3. Bulk, hugeness, பருமை. (*c.*)

அதுமொத்தமாயிருக்கிறது. It is bulky, it is lumped together.

மொத்தமாய்க்கொடுப்பேன். I will pay all at once.

மொத்தத்தொகை, *s.* The grand-total.

மொத்தப்பட்டா, *s.* Lease of a village, or district.

மொத்தளம், *s.* [*prov.*] Vast numbers together, a great crowd, கூட்டம்.

மொத்தி, *s.* [*prov.*] Excrescence, protuberance, புடைப்பு.

மொத்து, கிறேன், மொத்தினேன், வேன், மொத்த, *v. a.* To strike, to beat, அடிக்க. (*c.*)

மொத்தல் — மொத்து, *v. noun.* Beat.

மொத்தை, *s.* A ball or lump. 2. An ignorant woman, as முத்தை.

மொந்தன், *s.* A plantain tree yielding a large fruit, நேந்திரவாழை.

மொந்தை, *s.* A small vessel for sour milk, toddy, &c., as முத்தை. (*c.*) 2. A drum open at one end, ஒற்கப்பறை. (சது.)

மொந்தையெடுத்தான். He has taken up [hidden treasure in] a vessel.

மோருக்கும்போய்மொந்தையைவெளிக்கிறதா..... Going for butter-milk, will he hide his vessel?

மொபவில், *s.* [*Pers.*] The country, *as opposed to the* town, *Mofussil.*

மொபபு, *s.* A putrid smell of sour milk, tainted meat, &c., வெடிநாற்றம். *(Colloq.)*

மொப்படித்தல், *v. noun.* Emitting an offensive smell.

மொய், *s.* A company, an assembly, a crowd, கூட்டம். 2. Pride, பெருமை. 3. A fight, war, battle, போர். 4. A field of battle, போர்க்களம். 5. A press, a throng, a swarm, மொய்ப்பு. 6. An elephant, யானை. 7. A beetle, வண்டு. (சது.) 8. Money given or subscribed in small sums, as to a new married couple, மணமுதலியவற்றில்வழங்குமொய்.

அவனுக்காகைமொய்யெழுதிவிட்டேன். I have lost that money; *given it in vain.*

மொய்த்தாய், *s.* A mother, தாய். (சது.)

மொய்ப்பணம், *s.* Money given in small sums, as மொய்.

மொய்யெழுத, *inf.* To subscribe small sums in charity.

மொய்ச்சதிர், *s.* The paps of women, or teats of the lower animals, மூலை. (சது.)

மொய், க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To crowd, press, throng, swarm—as flies, bees, ants, &c, நெருக்க. 2. To cover, மூட.

சமொய்க்கிறது. Flies swarm.

சாப்பன்மொய்க்கிறது. The eruption is spreading.

தலையில்வீஷம்மொய்க்கிறது. The poison has reached the head. (*p.*)

ஒருவனைமொய்த்துக்கொள்ளுதல்.....Reducing, impoverishing, or ruining one.

வெல்லப்பானையைக்கண்மொய்த்துக்கொண்டதுபோல, As flies surround a pot of sugar.

மொர்ய்ம்பு, *s.* The shoulder, தோள். 2. Strength, prowess, வலி. (சது.)

மொர, *s.* [*indeclin.*] An imitative sound.

மொரமொரெனல் — மொருமொரெனல்—மொறமொறெனல், *v. noun.* Indicating an imitative sound, ஈரக்கொலிக்குறிப்பு.

இலைசாய்ந்துமொருமொரென்றுபோயிற்று....The dry leaves crumple.

மொலு—மொல்லு, *s.* [*indeclin.*] An imitative sound. 2. A noise made with the hands, or feet preparatory to a fight, இரைச்சல்.

மொலுமொலெனல், *v. noun.* Indicating an unceasing, troublesome talking; also scratching, ஒலிக்குறிப்பு. 2. Indicating a noisy clamor.

மொலுமொலென்றடித்துக்கொள்ளுகிறது..... Attacking one with great noise and bustle.

மொழி, *s.* A word, a saying, சொல். 2. Speech, declaration, expression, வாக்கியம். தேவ்மொழி. An oracle, சாஸ்திரம்.

மொழி, *v.* Three sorts of speech: 1. மெய்கூறல், speaking the truth; 2. புகழ்கூறல், panegyrising, or flattering; 3. பழிகூறல், calumniating or abusing.

மொழிதடுமாற, *inf.* To stammer in speaking, *naturally or otherwise.*

மொழிபிசக — மொழிபிறழ, *inf.* To fail in keeping one's word.

மொழிபெயர்ப்பு, *v. noun.* Translation, interpretation. See அலியாப்பு.

மொழிமாற்று, *v. noun.* A transposition of words, as சுரையாழவம்மிதக்க, the gourd sinks, the grinding stone swims. [*நன்னூல்.*]

மொழிமாற்றுப்பொருள்கோள், *s.* One of the eight modes of constructing a verse. See பொருள்கோள்.

மொழிமுதலெழுத்து, *s.* Initial letters, proper to begin words. These are any of the twelve vowels, and க, ச, த, ப, ஞ, ந, ம, ய, வ. as animated consonants.—*Note.* Usually these consonants (as initials) may be animated by any vowel as well as அ, but ஈ, must have also a vowel prefix.

மொழிமுதற்காரணம், *s.* See காரணம்.

மொழிமை, *s.* An old word, பழஞ் சொல். (*சது.*)

மொழியிடையெழுத்து, *s.* Letters proper to follow inanimate consonants in the middle of a word. See *Nannúl.*

மொழியிறுதி—மொழியீறு, *s.* [*in gram.*] The termination of a word.

மொழியீற்றெழுத்து, *s.* Final letters. These are, the twelve vowels, and ஞ, ண், ந், ம், ன், ப், ர், ல், வ், ழ், ள், or animated by உ short, as found in குறியதுகரமொழிகள்.

மொழியொலிக்குறிப்பு, *s.* Tone, emphasis, or inflexion.

மொழியோசை, *s.* Pronunciation, உச்சரிப்பு.

மொழி, றேன், ந்தேன், வேன், ய, *v. a.* To say, to speak, சொல்ல. (*p.*)

மொழிவதறமொழி. Say what thou sayest rightly.

மொழிவதுமுரற்கினமிவதகரும். If the words of the ancients be forgotten, the business will not succeed.

மொழிதல், *v. noun.* Speaking.

மொழுக்கன், *s.* [*for* மழுங்கன்.] A jewel without engraving, a plain jewel.

மொழுக்கன்மோதிரம். A plain ring.

மொழுக்கனோலை. A plain ear-ring for a female.

மொழுப்பு, *v.* [*for* மழுப்பு.] To protract a business, delay a law-suit, or put off payment on frivolous pretences.

மொள்ளு, றேன், மொண்டேன், வேன், மொள்ள, *v. a.* To draw water, தண்ணீர் மொள்ள.

மொண்டாளுறைவீட்டிற் கொண்டாண்டாரிறையும். Does a house with drawn-water [from a well] need water bought?

மொறுமொறு, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க, *v. n.* To evince anger, to murmur, as முறுமுறுக்க.

மொறுமொறெனல், *v. noun.* Crumpling—as overdone cakes, dried leaves or paper.

மோ

மோ. A syllabic letter compounded of ம் and ஓ.

மோ. An expletive [*affixed to the second person singular of verbs.*] as கேண்மோ, hear.

*மோகம், *s.* Fierce, ungovernable lust, lasciviousness, காமம். 2. Desire, affection, ஆசை. 3. Confusion of mind, bewilderment, fainting, உன்மத்தம். See under பசை, உட்பசை க., *also* மசை ம. and பஞ்சபாண வஸ்தை. W. p. 676. MOHA. 4. [*in comb.*] Barrenness. See அமோகம்.

